பட்டாணி

எஸ்.எம்.கமாலுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. C.M. Ayoob.
Colombo - 9.

RAHMATH'S
SUPER PARADISE SUPER MARKET,
124/1-4, KEYZER STREET,
COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்பீன்

கட்டுரைத் தொகுப்பு

எஸ். எம். கமாலுத்தீன்

அகில இலங்கை
முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை
63 வஜிரஞான மாவத்த
கொழும்பு–9
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு: 1979

இந்நூல் கொழும்பில் 1979 ஜூன் 29, 30 ஜூலை 1 ஆகிய திகதிகள் நடைபெறும் நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டினையொட்டி வெளியிடப்படுகின்றது.

BERBERYN

A Collection of Essays

Author:

S. M. KAMALDEEN

Publishers: Bureau of Publication

All Ceylon Young Men's Muslim Association
63, Vajiragnana Mawatha
Colombo-9 Sri-Lanka

Printed at:

I. P. C. Printing Press
320, N. M. M. Ishak Mawatha
Colombo-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

எமது பேரவையின் முன்னை நாள் தலைவரும் தற்போதைய நம்பிக்கையாளர் சபை உறுப்பினருமாகிய ஜனுப். எஸ். எம். கமாலுத்தீன் B. A. BED. DIP. LIB. அவர்களால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஆக்கப்பட்ட மூன்று கட்டுரைகளைக் கொண்ட இத்தொகுப்பினைக் கொழும்பில் 1979 ஜுன் 29, 30 ஜுலை 1 ஆகிய திகதிகளில் நடைபெறும் நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டினை யொட்டி வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய வளத்தினைக் கூறும் இக்கட்டுரைகளுள் ''இலங்கை முஸ்லிம்களின் இலக்கிய முதிசம்'' சென்னையில் 1974ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினை ஆய்வோருக்கு இக்கட்டுரைகளிற் காணும் குறிப்புக்கள் சிறந்த அறிமுகமாக உதவுமென்று நம்புகிறோம்.

எமது பேரவையின் நூல் வெளியீட்டுப் பிரிவினுல் அச்சேற்றப்படும் முதலாவது தமிழ் வெளியீடான ''பர்பரீன்'' கட்டுரைத் தொகுப்பினை ஆதரித்து எம்மை நூல் வெளியீட்டுத்துறையில் ஊக்குவிக்குமாறு அனைவரையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

எம். டி. எம். ஹம்ஸா
தலைவர்
அ. இ. மு. வா. ச. பேரவை

25. 5. 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய பாரம்பரியம்

இஸ்லாத்தின் தோற்றத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அரேபியர்கள் இலங்கையோடு தொடர்பு கொண்டிருந்தனர். கீழ்த்திசை நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்குமிடையிலான வர்த்தகம் அவர்கள் கைகளிலேயேயிருந்து வந்தது.

அரேபியாவிலிருந்து முஸ்லிம்கள் முதன் முதலில் இலங்கையில் குடியேறியது எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் என்பது ஸர். அலெக்ஸண்டர் ஜொன்ஸ்டன் அவர்களது கருத்தாகும். அவர்கள் கூற்றுப்படிக்கு இலங்கை வந்த அரேபியர்கள் திருக்கோணமலை, யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னூர், குதிரைமலை, புத்தளம், கொழும்பு, வேருவளை, காலி ஆகிய பிரதேசங்களில் குடியேறினர்கள்.

அரேபிய முஸ்லிம்கள் ஏழாம் நூற்றுண்டின் இறுதிக்கு முன்பே இலங்கையில் குடியேறிவிட்டார்கள் என்பது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் கருத்தாகும். இக்காலம் முதல் பதினாரும் நூற்றுண்டு வரை முஸ்லிம்களின் வர்த்தகச் செல்வாக்கு அதி உன்னதமான நிலையிலிருந்து வந்தது. 14 ஆம் நூற்றுண்டில் இலங்கை வந்த இப்னு பத்துதா கொழும்பில் ஜலஸ்தி என்ற பிரபல கடலோடியின் கீழ் 500 அபிஸீனியர்கள் சேவை புரிந்து வந்ததாகக் குறிப்பிடுவதிலிருந்து இப்பிரதான நகரில் முஸ்லிம்களின் வர்த்தகச் செல்வாக்குப் புலனாகிறது. முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்களில் ஒன்றாகிய வேருவளையிலும் அவர்களுடைய வர்த்தகச் செல்வாக்கு நிலை பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் (கி. பி. 1349) இத்தாலியிருந்து சீனு சென்று திரும்பிக்கொண்டிருந்த ஜான் டி மரிநோல்லி (John de Marignolli) என்ற பிரயாணி இலங்கையில் பெர்விலிஸ் (Pervilis) என்ற ஒரு துறைமுகத்தில் வந்திறங்கியதாகவும் அப்பிரதேசம் ஒரு முஸ்லிமுடைய ஆதிக்கத்தில் இருந்ததாகவும் கூறியுள்ளார். அந்த முஸ்லிம் தம்முடைய பெருஞ்செல்வத்தின் பலத்தால் நாட்டின் அரசனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்படாமலிருந்து வந்தாரென்றும் அப்பிரயாணி கூறியுள்ளார். பெர்விலிஸ் என்ற துறைமுகம் வேருவளை என்று கூறப்படுகிறது.

இதே காலக்கட்டத்தில் எழுந்த ''திஸரசந்தேய'' எனும் சிங்களத் தூதுக் கவிதை நூலில் வேருவளையின் உன்னதச் செல்வ நிலையையும் அங்கு காணப்பட்ட பெருந்தொகையான முஸ்லிம் வர்த்தகர்களையும் பற்றிக் கூறப்படுகின்றது. இதன் பின்னர் பதினைும் நூற்றுண்டின் முற்பகுதியில் எழுந்த ''கிருசந்தேய'' ''பரவிசந்தேசய'' முதலிய நூல்களிலும் வேருவளைத் துறைமுகத்தில் இரத்தினக் கற்கள் உட்பட்ட பல பெறுமதிவாய்ந்த பொருட்களின் வர்த்தகம் பற்றிப் பேசப்படுகிறது.

உலகப்பிரசித்தி பெற்ற தேசாந்திரியாகிய இப்னுபத்தூதா தமது இலங்கை அநுபவங்களைக் கூறும்போது இந்நாட்டின் உட்பிரதேசங்களில் கூடப் பல முஸ்லிம் ஞானியர்கள் சென்று நிலைபெற்றுள்ளதையும், சுதேச மக்களிடையே அப்பெரியார்கள் மிகவும் கௌரவிக்கப்பட்டு வந்ததையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிற்சில இடங்களில் பள்ளிவாயல்களைக் கண்டதாகவும் கூறியுள்ளார்.

சிங்கள - முஸ்லிம் நல்லுறவு

இப்னுபத்தூதாவின் கூற்றுக்களிலிருந்து நாம் அக்காலத்தே இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் உள்நாட்டில் நிலவிய ஆதிக்கப் பூசல்களில் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லையென்பதையும் அனைவரோடும் தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுறவு கொண்டிருந்தார்களென்பதையும் அறியக்கூடியதாயிருக்கிறது. அபூஸயீத் சிராஃபி என்ற அரேபியர் தமது பிரயாணத்தின் போதிருந்த சிங்கள மன்னர், எல்லா இனத்தவரும் தத்தம் மதத்தைப் பின்பற்றக்கூடிய வாய்ப்பினை அளித்திருந்தார் என்று கூறுகிறுர். இவரது கூற்றுக்களிலிருந்தும் அரேபிய வர்த்தகர்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான நெருங்கிய தொடர்பினையும், இதன் விளைவாகப் பெருந்தொகையான வர்த்தகர்கள் இந்நாட்டிலேயே குடியேறி விட்டதையும் நாமறியக்கூடியதாயிருக்கின்றது.

இவ்விடத்தில் சர் அலெக்ஸண்டர் ஜொன்ஸ்டன் அவர்களுடைய பின்வரும் கூற்று இலங்கையில் குடியேறிய ஆரம்ப கால முஸ்லிம்கள் தமது பாரம்பரியத்தைப் பேணிய வகையினைத் தெளிவதற்கு ஏதுவாயிருக்கும்:

''பாரசீகக்குடாக் கடல், பஸ்ரா ஆகியவற்றினூடாக பக்தாத் உடனும் ஏனைய கிலாபத் நாடுகளுடனும், ஆரேபியக் குடாக் கடல், எகிப்து ஆகியவற்றினூடாக மத்தியதரைக் கடலோரமாகவுமுள்ள முஸ்லிம் அரசுகளோடும், ஸ்பெயினிலுள்ள முஸ்லிம் அரசுகளோடும், கொண்டிருந்த தொடர்பின் மூலம் அவர்கள் இந்த நாடுகளிலிருந்து முஸ்லிம் சட்டம் பற்றிப் பல மூல அரபுக்கிரந்தங்களை இலங்கைக்கு அறிமுகப் படுத்தினுர்கள். மற்றும் மருத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளிலான மிகவும் பெறுமதிவாய்ந்த கிரேக்க, உரோம பாரகிரந்தங்களின் அறபு மொழி பெயர்ப்புக்களையும் அவர்கள் இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினுர்கள்.

இந்நாட்டு மன்னர்களிடையே அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு முக்கியமான சலுகையையும் பெற்றிருந்தார்கள். அது யாதெனில் முஸ்லிம்கள் வர்த்தகத் தொடர்புகொண்ட எல்லாத் துறைமுகங்களிலும், வர்த்தகம் சம்பந்தமான அல்லது கடலுரிமை சம்பந்தமான வழக்குகளில் ஒரு முஸ்லிம் வர்த்தகர், கடலோடி அல்லது கப்பல் சம்பந்தப்பட்டிருந்தால் அந்த வழக்கு நிகழ்களமாகிய துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்திலேயே அவ்வழக்குத் தாமதமின்றியும், செலவின்றியும் தீர்த்துவைக்கப்படவேண்டும். இதற்காக நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தொகை முஸ்லிம் சமயப்பெரியார்களும், வர்த்தகர்களும், கடலோடிகளும் இடம்பெறவேண்டும். மேலும் ஆசியப் பிராந்திய முஸ்லிம்களுக்கிடையேபொதுவாக வழங்கி வரும் கடல் வர்த்தகச்சட்டப்படி நீதி வழங்கப்படவேண்டும்.''

இதிலிருந்து இந்நாட்டில் குடியேறிய முஸ்லிம்கள், இலங்கை மன்னர்களின் பரந்த மனப்பான்மையின் காரணமாகத் தமது சமயத்தின் அடிப்படையிலான வாழ்க்கை முறையினைப் பேணிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டதென்பது தெளிவாகிறது. இந்நிலையைப் பின்னரும் விளக்கிக் கூறுவோம்.

ஐரோப்பியரின் வருகை

போர்த்துக்கீஸியர் முதன் முதலாகக் கொழும்புத்துறை முகத்தில் வந்திறங்கிய போது அந்நகரின் வர்த்தகம் பெரும்பாலும் முஸ்லிம்களின் கைகளிலேயே இருக்கக் கண்டார்கள். தவத்திரு எஸ். ஜி. பெரேரா அவர்கள் தமது இலங்கைச் சரித்திர நூலில் போர்த்துக்கீஸியத் தலைவன் கொழும்பில் வந்திறங்கியபோது அந்நகரின் நிலையைப் பின்வருமாறு விவரிக்கிறார்:

''இத்தீவின் வர்த்தகத்துக்குக் கொழும்பு பிரதான சந்தையாக விளங்கியது. கடலோடிகளான அரேபியர்களது சந்ததிகளான முஸ்லிம் வர்த்தகர்களின் கைகளிலேயே கறுவா, தேங்காய் முதலிய பொருட்களினதும். யானைகளினதும் வர்த்தகம் தங்கியிருந்தது, தங்கள் விற்பனைப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு அவர்கள் பல பண்டகசாலைகளை (Bangasalas) கட்டியிருந்தனர். நகரின் சனத்தொகையில் பெரும்பான்மையோர் முஸ்லிம்களாயிருந்தனர். அங்கு ஒரு மையவாடியுடன் கூடிய பள்ளிவாயிலும், முஸ்லிம் சட்டப்படி சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதற்கான நீதிமன்றமொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் இருந்தன''. பழைய பண்டகசாலைகள் இருந்த பகுதியே தற்போதைய புறக்கோட்டையிலுள்ள பெங்ஷோல் (Bank shall) வீதியாகும்.

இந்நாட்டை கி. பி. 1505 இல் அடைந்த போர்த்துக்கீஸியர், அரேபிய வணிகர்களை ஒழித்துக்கட்டுவதில் மும்முரமாக முனைந்தனர். இவ் ஐரோப்பியரின் வருகையோடு இதுகாறும் எதுவித வர்த்தகப்போட்டியுமின்றி வாழ்ந்துவந்த முஸ்லிம்களின் செல்வாக்குத் தேய்வுறலாயிற்று. வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகள் வெகுவாகத் துண்டிக்கப்பட்டன. உள்நாட்டிலும் கூட உரிமைகள் யாவும் பறிபோயின. உண்மையில் கரையோரப் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான முஸ்லிம்கள் உயிர்தப்பி மலைப்பிரதேசங்களில் தஞ்சம் புக வேண்டிய நிலையுமேற்பட்டது. இவ்வகையிலேற்பட்டவை தான் மாவனெல்லை, ஹெம்மாத்தகம, உடுநுவர முதலிய கிராமங்களாயிருத்தல் வேண்டும். இவை போன்ற கிராமங்களில் இன்றும்கூட நாம் முழுவதும் முஸ்லிம்களே குடியிருப்பதைக் காணலாம். வர்த்தகத் தொடர்பான கருமங்களில் சிங்கள மக்களுடன் மிகுந்த நேச பான்மையோடு பழகிவந்த போதிலும் மத கலாசார அடிப்படையில் முஸ்லிம்கள் மிகவும் கட்டுப்பாட்டுடனேயே நடந்து வந்துள்ளார்கள்.

போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆகியோரின் ஆதிக்கத்தில் கரையோரப்பகுதிகளில் இருநூறுண்டுகளுக்கு மேல் முஸ்லிம்கள் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்து வந்த வேளையில் கண்டிப் பிரதேச முஸ்லிம்கள் அமைதியாக முன்னேற்றமடைந்து வந்தனர். இந்நிலை பற்றி இலங்கைப் பல்கலைக்கழகச் சரித்திர விரிவுரையாளர் கலாநிதி கே. டபிள்யு. குணவர்த்தன ''ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட முஸ்லிம்கள் நிலை'' பற்றிய கட்டுரை ஒன்றில் பின்வருமாறு கூறுகிறார்:

மேற்கத்தியரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் நிலவிய நிலைபோலன்றி அவர்கள் (கண்டிப்பிரதேச முஸ்லிம்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய சுதந்திர முடையவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய வர்த்தக நடவடிக்கைகள் இடையூறின்றி நடந்துவந்தன. கண்டி மன்னர்கள் முஸ்லிம்களை அவர்களிடம் காணப்பட்ட சில விசேடத் திறமைகளை முன்னிட்டுத் தமது இராச்சியத்திற்குள் வரவேற்றனர். அவர்களுக்குத் தக்க பதவிகளையும், நில மான்யங்களையும் வழங்கிக் கௌரவித்தனர். இந்த முஸ்லிம்கள் முத்துக்கள், இரத்தினக்கற்கள் பற்றிய விசேட அறிவு படைத்தவர்கள். முஸ்லிம் மருத்துவர்கள் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களுடைய விசேடத் திறமை மன்னர்களால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்குக் கௌரவமும் வழங்கப்பட்டது.''

தமது மார்க்க, கலாசார, சமூகத் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் நெடுகிலும் முஸ்லிம்கள் காட்டி வந்துள்ள அக்கறைதான் இதுகாறும் முஸ்லிம் கிராமங்களில் அவர்களின் கட்டுப்பாடான ஒருமைப்பாட்டிற்கும் மார்க்கப் பிணைப்பிற்கும் அடிப்படைக் காரணமாக இருந்து வந்துள்ளது.

போர்த்துக்கீஸியரின் காலத்துச் சோனகர்களைப் பற்றிக் குறிப்பிடும் குவேரோஸ் பாதிரியார், களுத்துறைக்கு அண்மையில் ஒரு கிராமம் இருந்ததாகவும் அக்கிராமம் முழுவதுமே சோனகர்கள் கூட்டாக வாழ்ந்ததாகவும் அக்கிராமம் சோனகர் கிராமமென்றே அழைக்கப்பட்டதாகவும் கூறுகிறார். அக்கிராமத்தில் ஒரு ''காதியார்'' (காஸி) போதனை செய்துவந்ததாகவும் அவர் கூறுகிறார்.

மதமாற்ற முயற்சிகள்

இந்நாட்டிற்குத் தாம் வந்தகாலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டம் வரை ஐரோப்பியர்கள் இங்குள்ள பௌத்த, ஹிந்து, முஸ்லிம் மக்களைத் தமது மதவழிச் செலுத்த முயன்றே வந்திருக்கிறார்கள். இந்நாட்டில் ஐரோப்பியரின் மதமாற்ற முயற்சிகளை விவரிப்பதாயின் விரியுமாதலின் அதனை விடுத்து இவ்வகையில் முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே எவ்வித தாக்கம் ஏற்பட்டதென்பதை மட்டும் இங்கெடுத்துக்கூற விழைகிறேன்.

முஸ்லிம் அல்லாதாரிடையே போர்த்துக்கீஸியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய முப்பிரிவினரும் த' தம் சமயப் பிரச்சார முயற்சிகளில் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டினரெனினும் முஸ்லிம்களிடையே இவர்கள் பெருந்தோல்வியினையே கண்டார்கள் என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

சென்ற நூற்றுண்டின் நடுப்பகுதியில் கண்டிப்பிரதேசத்தில் சமயப்பணியாற்றிய செல்கர்க் பாதிரியார் (Rev. James Selkirk) முஸ்லிம்கள் தமது மதப் பிரசார முயற்சிக்குக் காட்டிய எதிர்ப்பை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் பின்வருமாறு கூறுகிறுர்.

"அவர்கள் (சோனகர்கள்) இடையே புகுவது மிகவும் கடினமாகும். கிறிஸ்தவ வெளியீடுகள், வேதநூல்கள் ஆகியவற்றை அவர்களிடையே விநியோகிக்க முயன்றவிடத்து அவர்கள் பெரும் ஆத்திரமடையக் கண்டேன். அவற்றையெல்லாம் அவர்கள் முற்றுகப் புறக்கணித்துவிடுகிறுர்கள். எந்தவொரு மிஷினரிச் சங்கமாவது இதுவரை அவர்களிடையே பாடசாலைகளை நிறுவுவதில் வெற்றி காணவில்லை"

முஸ்லிம்களிடையே மதமாற்றம் அக்காலத்தே தலைகாட்டவில்லை என்பதற்கு எமர்ஸன் டெனண்ட் (Emerson Tennent) "இலங்கையில் கிறிஸ்து மதம்" என்ற நூலில் ஹோவ் (Hough) என்பாரின் பின்வரும் கூற்றை ஆதாரம் காட்டியுள்ளார்:

18 ஆம் நூற்றுண்டின் முடிவிற்குள் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 300,000 ஆகக் குறைந்துவிட்டது. கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்ட எண்ணற்ற சிங்களவர், தமிழரிடையே ஒரு சோனகர் அல்லது முகம்மதியரேனும் மதமாற்றம் செய்யப்பட்டார் என்று எமது பதிவு ஏடுகளில் காணப் படவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்தினை எஸ். எல். கோர்டன் கம்மின்ஸ் என்பாரும் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: "போர்த்துக்கீவியர் ஒல்லாந்தார் காலத்தில் நடைபெற்ற ஏகப்பட்ட மத மாற்றங்களின்போது ஒரு சோனகரேனும் எதிரிகளுடைய மதத்துக்கு மாற்றப்பட்டதாக அவர்களுடைய ஏடுகளில் காணப்படவில்லை."

இலட்சக்கணக்கானோர் மதம் மாறிய ஒரு காலத்தில் ஒரு முஸ்லிமேனும் தன் நிலை மாறவில்லையென்று கூறும் அளவிற்கு அக்கால முஸ்லிம்களைத் தமது மார்க்கத்தில் உறுதிப்பாட்டுடன் நிற்கச் செய்த சக்தி எது? இந்நிலைக்கு நாம் பல்வேறு விளக்கங்களைத் தரலாம். ஆனால் அவை அனைத்திற்கும் அடித்தளமாக நாம் கூறக்கூடியது இஸ்லாமிய தத்துவங்களின் வலிமையேயாகும். அதற்கடுத்தபடியாக நாம் முஸ்லிம்களின் சமூக அமைப்பினைக் காரணமாகக் கூறலாம்.

சமூகத்தில் ஆலிம்களின் நிலை

ஒரு முஸ்லிம் கிராமத்தின் உயிர்நாடி அதன் கண்ணுள்ள பள்ளிவாயிலேயாகும். அப்பள்ளியைச் சுற்றியே அனைத்தும் நிகழும். அதுவே அக்கிராம மக்களின் கலாசார நிலையமுமாகும். கிராமங்களின் சமய கலாசாரத்துறைகளில் வழிகாட்டியாகத் திகழ்பவர் பள்ளிவாயிலில் இமாமாகக் கடமையாற்றும் ஆலிமாகும். கிராமத்தவரின் மத்தியில் இவர் வகிக்கும் இடத்தைத் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் அப்துல்காதர் லெப்பை, "செய்னம்பு நாச்சியார் மான்மியம்" எனும் கவிதை நூலின் பின்வரும் பாடல்களில்:

"எல்லா மறிந்த
எங்கள் ஆலிமு
நல்லது சொல்வார்
நாமேன் தடுப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவல் விலக்கல்
எல்லாம் அறிவார்
பாவம் என்றால்
பதறி விலகுவார்
குடும்ப மெல்லாம்
குலத்தோட றிவார்''
''ஆண்டுக்கத்தம்
ஆரார் வீட்டில்
அடுக்காய் வருமென்றவரே
அறிவார்
ஊரை அளந்த
உத்தமர் அவரே
பேரைக் கேட்டால்
பிள்ளையும் பிறக்கும்
ஊதிப் பார்த்தால்
''ஊரோடி'' யோடும்''

மேலும் இந்நூலின் முன்னுரையில் கவிஞர் தரும் விளக்கமும் கவனிக்கத்தக்கது:

''சமூகத்தின் பிரதான பங்கை எடுப்பவர் குரு. மத அறிவு புகட்டல், சடங்குகளை நடத்துதல் போன்றவற்றில் ஆலிம்கள் ஒரு தனி இடம் வகிக்கின்றனர். இவர்களுடைய சேவை அதிகம் விரும்பப்படுவதால் சமூகத்திலேற்படும் சாதக பாதகங்களுக்குச் சிலவேளை அவர்களே பொறுப்பாளிகளாகி விடுகின்றனர். ஓதுகிற பாடசாலை நடத்தும் விடயத்தில் அவர்களுடைய சேவை விரும்பப்படுவது ஒரு பக்கமிருக்க, பிரம்பும் கையுமாக அவர்களிருப்பதைக்கண்டு சமூகத்தில் அவர்கள் ஓர் அச்சந்தரும் உருவாகவும் மாறிவிடுகின்றனர். ஒரு தாய் தனது அடங்காத பிள்ளையை ''அதோ ஆலிம் வருகிறார் பிடித்துக் கொடுப்பேன்'' என்று பயங் காட்டுவது இன்றும் தாய்மார்களுக்கிடையில் வழக்கமாகி விட்டது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆலிமே கிராமத்தில் குழந்தைகளுக்கு குர் ஆன் ஓதிக் கொடுப்பது, ஹதீது சொல்வது, மற்றும் கத்தம், பாத்திஹா ஓதுவது போன்ற நடவடிக்கைகள் மூலம் கிரா மத்தவரின் சமயத் தொடர்புக்கு வழிவகுப்பவராவார்.

சமயச் சட்டங்கள்

முஸ்லிம்களின் வர்த்தகத் தொடர்பான சட்ட அமைப் பினை ஏற்கனவே கண்டோம். அவர்களுடைய சமய, சமூகத் துறைகளிலான சட்டதிட்டங்களும் மிகவும் சிறப்பான வகை யில் பேணப்பட்டு வந்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கதா கும். இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மின்ஹாஜ் அத் தாலிபீன் போன்ற ஓர் இஸ்லாமியச் சட்ட நூலில் முஸ்லிம்களின் வாழ்கையின் பல துறைகளையும் அளாவிய சட்டதிட்டங்கள் அடங்கியுள்ளன. இலங்கை முஸ்லிம்களி டையே இவைகளின் அநுஷ்டானம் பற்றி ஜனாப் எச். எம். இஸட். பாருக் "இலங்கையில் முஸ்லிம் சட்டம்" என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

"சமூகத்தவரின் அன்றாட சமய, சமூக வாழ்க்கைத் தொடர்பான முக்கியமான விடயங்களில் ஒன்றித்த குடிக ளாகத் தனித் தனிக் கிராமங்களில் வாழ்ந்துவரும் இலங்கை முஸ்லிம்கள் இச்சட்டங்களைத் தமது சமூகத்துக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாட்டின் வழிநின்று பின் பற்றி வந்துள்ளார்கள். ஆட்சியாளருக்குப் பயந்து இச்சட் டங்களை அவர்கள் அநுசரிக்கவில்லை. தோன்றாத் தாக்கமா கிய மரபு வழி நின்று தமது சமயப் பாரம்பரியத்தில் கொண்ட உறுதியான பற்றின் காரணமாக அவர்கள், இச்சட்டங்களை ஏற்று நடந்தார்கள். மக்களுடைய தேவையோடொட்டிய சட்டங்களை உலமாக்கள் அவர்களுக்குப் போதித்தார்கள். இவ்வுலமாக்களில் அரேபியா, எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளில் அறிவுத் தேட்டத்திலும், பிரயாணத்திலும் பல ஆண்டுகளைக் கழித்தோர் பலரிருந்தனர். இவர்கள் மூலமா கவே இந்த நாடுகளில் நிலவிய முஸ்லிம் சட்டங்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய கிரந்தங்கள் காலத்திற்குக் காலம் இங்கு அறிமுகப் படுத்தப்பட்டன''.

இவ்வாறு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கிரந்தங்கள் சில அறபுத் தமிழில் ஆக்கப்பட்டவையாகும். அறபு மூலத்திலிருந்து இவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கித்தாபுகளின் கையெழுத்துப் பிரதிகள் எமது கிராமங்கள் தோறும் உலமாக்களால் கொண்டு செல்லப்பட்டு பள்ளிவாயல்களில் மக்களின் தேவைக்காக இட்டு வைக்கப்பட்டன. இவ்விதமான முஸ்லிம் நாடுகளோடான கலாசாரத் தொடர்புகள் ஐரோப்பியரின் வருகையோடு அரிதாகிவிட்டன.''

இலங்கை - தமிழக உறவு

எனினும், ஆத்மீகத்துறையில் இந்நாட்டு முஸ்லிம்களுக்கும் தமிழகத்து முஸ்லிம்களுக்குமிடையே மிகவும் நெருங்கிய தொடர்பு நெடுகிலும் இருந்தே வந்துள்ளது. இங்குள்ள பெரும்பாலான முஸ்லிம் கிராமங்கள் காலத்துக்குக் காலம் கோட்டாறு, காயல்பட்டினம், கீழக்கரை போன்ற இடங்களிலிருந்து வந்துபோன சன்மார்க்கப் பெரியார்களின் உபதேசங்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளன. மேலும் இலங்கை முஸ்லிம்கள் தமிழகத்தேயுள்ள வேலூர் மதரஸா, பாக்கியத்துல் ஸாலிஹா போன்ற அரிய மார்க்க போதனுபீடங்களில் பயின்று வந்து இந்நாட்டில் சமயப்பணியாற்றி வந்துள்ளார்கள். ஈழத்திற்கும் தமிழகத்திற்குமிடையிலான சமய, கலாசாரத் தொடர்பிற்குச் சிறந்த உதாரணமாக நாம் காயல்பட்டினம் ஈந்த ஆலிமுல் அரூஸ் ஸெய்யித் முஹம்மத் மாப்பிள்ளை ஆலிம் அவர்களுடைய சமயப் பணியின் பரம்பலைக் கூறலாம்.

அறபுத் தமிழில் இஸ்லாமியச் சட்ட நூல்களையும், பெருந்தொகையான தனிப்பாடல்களையும் இம்மெய்ஞ்ஞானியார் இயற்றியுள்ளார்கள். நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் அருமை மகளார் பாத்திமா நாயகியின் பெயரில் பாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட "தலை பாத்திஹறா" இலங்கை முஸ்லிம்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. இவ்வுண்மையை மிகுந்த உருக்கத்தோடு இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். ஏ. எம். ஷுக்ரி அவர்கள் "ஷெய்கு நாயகம்" சிறப்பு மலரில் பின்வருமாறு கூறுகிறார்:

"பெருமானார் (ஸல்) அவர்களின் திருப் புதல்வியார் பேரில் உள்ள தலை பாத்திஹறா ஈழத்தில் இசை பெறும் காலம்வரை, ஈழத்துப் பள்ளிகளில் "ஜலாலியா ராதிபின்" ஓங்கார ஓசை ஒலிக்கும்வரை, அஷ்ஷெய்குல் காமில் இமாமுல் அரூஸ் ஹாஜ்ஜுல் ஹரமைன் மலிக்குஷ் ஷுகரா மாப்பிள்ளை ஆலிம் நாயகம் அவர்களின் திருநாமம் எங்கள் நெஞ்சங்களில் நிலைபெற்றிருக்கும்"

பள்ளிவாயலின் மத்திய நிலை

இத்தகைய மதப்பிணைப்பே இந்நாட்டு முஸ்லிம்கள் பிற மதத்தாக்கங்கள் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கக்கூடிய வலிமையை ஈந்தது. அத்துடன் தமிழ்மொழியின் தொடர்பான வளர்ச்சிக்கும் வழிகோலியது. இஸ்லாமிய இலக்கியம் பெரும்பாலும் தமிழ், அரபுத்தமிழ் ஆகிய மொழிகளில் வழங்கியமையும், பள்ளிவாயில்களில் குத்பா பிரசங்கம், ஹதீது ஆகியன தமிழிலேயே நிகழ்ந்தமையும் தமிழ்மொழி முஸ்லிம்களிடையே நிலைபெற்று வளர்ச்சியுற ஏதுவாயிற்று.

இலங்கை வந்த தமிழக முஸ்லிம் பெரியார்களுள் பலர் இந்த நாட்டிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்து இறைவனடி சேர்ந்துள்ளார்கள். கண்டி மீரான் மக்காமில் அடங்கியுள்ள அஷ்ஷெய்கு ஸஹாபுத்தீன் வலியுல்லா அவர்கள் இவ்விதமாக மார்க்கப் பணிபுரிய வந்தவர்களேயாகும். இத்துடன் இந்நாட்டிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் கிராமங்களில் நெடுகிலும் தமிழக முஸ்லிம்கள் இமாம்களாகவும், முஅத்தீன்களாகவும் மதப்பணி புரிந்து வந்ததையும் இங்கு நாம் குறிப்பிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே அமைப்பைத்தான் நாம் பெரும்பாலான முஸ் லிம் கிராமங்களில் காணக்கூடும். கிராமத்தவரை ஜமா அத்தாகக் கொண்ட ஒரு பள்ளிவாயில், அதனோடு தொடர் பான மதரஸா மற்றும் அவற்றோடு இணைந்த பரிபாலன அமைப்பு, கலாசார அடிப்படையிலே ஹதீஸ் மஜ்லிஸ்கள் மௌலிதுகள், கந்தூரிகள், திருமணங்கள், சுன்னத்துச் சடங் குகள் பெருநாட்கள் முதலிய நிகழ்ச்சிகள் எல்லாம் அப்பள் ளிவாயிலை மையமாகக் கொண்டு இயங்கி வரும். பள்ளிவா யில்களின் நிர்வாகம் மத்திச்சம் என்றும், மரிக்கார் என்றும் அழைக்கப்படும் கிராமத் தலைவர்களைச் சார்ந்திருக்கும்.

இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி

முஸ்லிம் கிராமங்கள் தோறும் நிகழும் இத்தகு கலா சார நிகழ்ச்சிகள்தான் இன்றும் நம்மிடையே காணப்படும் இஸ்லாமிய இலக்கியப் படைப்புக்களின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்து வந்துள்ளன. அத்தோடு முஸ்லிம்களி டையே நிலவிவந்த களிக்கம்பு, கும்மி போன்ற கலை நிகழ்ச்சி களும் இலக்கியப் படைப்புக்களைத் தோற்றுவித்துள்ளன. றம்ழான் காலத்திலே மக்களைத் துயிலெழுப்பும் பக்கீர்கள் இசைக்கும் பைத்துக்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன.

கண்டி மீரான் மக்காம் பள்ளிவாயல், வேருவலையி லுள்ள கெச்சிமலைப் பள்ளிவாயல் முதலான திருத்தலங் கள், போப்பிட்டிய அருள்வாக்கி அப்துல் காதிறுப்புலவர், மக்கூன் அப்துல்ஹமீது மரைக்கார் புலவர் போன்றோரு டைய இலக்கியப் படைப்புக்களுக்கு இடமளித்தன.

முஸ்லிம்களுடைய மௌலிது மஜ்லிசுகளிலும் திருமணம்' கந்தூரி முதலிய களரிகளிலும் "பதம்" பாடும் மரபு, எண் ணற்ற இஸ்லாமிய கீர்த்தனைகளை எமக்களித்துள்ளன. இக் கீர்த்தனங்களின் பொருளாக இஸ்லாத்தின் மாண்பு, நபிகள் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, மற்றும் முஸ்லிம் ஆத்ம ஞானிகளின் வாழ்க்கை ஆகியன அமையும். இந்த இசைப் பாரம்பரியம் சிறப்பாகக் கிராமங்களில்தான் பேணப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. இன்றும்கூட இந்நாட்டின் சில பாகங்களில் முஸ்லிம் கிராமங்கள் இந்த மரபினைப் பின்பற்றி வருகின்றன.

ஒரு கிராமத்தில் அம்மை, வாந்திபேதி போன்ற கடும் தொற்றுநோய்கள், அல்லது கடும் கோடை ஏற்பட்டுவிட்டால் அவ்வேளையில் இறைவனிடம் நிவாரணம் தேடிப் பாடும் பாடல்கள் புனையப்படுவதுண்டு. இப்பாடல்களைத் தொடர்ந்து, பல நாட்கள் முஸ்லிம்கள் கூட்டமாகத் தெருத் தெருவாகப் பாடிக்கொண்டு செல்வார்கள். இவையெல்லாம் இப்போது அரிதாகிவிட்டன. மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் வழங்கிவரும் நாட்டுப்பாடல்களிலும் சமயப் பின்னணியை நாம் பரவலாகக் காணமுடியும்.

சித்தி லெவ்வையின் பணி

இறுதியாகக் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியப் பெருமைக்குப் புது மெருகூட்டி அவர்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர் சித்தி லெவ்வை அவர்களை இங்கு குறிப்பிடாவிடில் இக் கட்டுரை நிறைவுபெறுதென்று கருதுகிறேன். ''முஸ்லிம் நேசன்'' ''ஞான தீபம்'' ஆகிய சஞ்சிகைகளின் மூலம் முஸ்லிம்களின் பொதுவான முன்னேற்றத்திற்கும், சிறப்பாகக் கல்வி வளர்ச்சிக்கும் சித்திலெவ்வை அவர்களாற்றிய பணி சிறப்பு மிக்கதாகும். இப்பெரியார் உட்படப் பெருந்தொகையான முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய தத்துவப் போதனை வழங்கிய மெஞ்ஞானி கசாவத்தை ஆலிமப்பா அவர்களது பணியும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை முஸ்லிம்களின் மரபுகளில் தமிழர்களின் தொடர்பு ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறிப்பிடத்தக்கதாகும். இக்கலாசாரக் கலப்பினை ஆராய இக்கட்டுரை இடந்தராததலின் தவிர்க்கின்றேன். சமூகவியலாளருக்கு இத்துறை பயன்மிக்க தொன்றென்பதை மட்டும் இங்கு சுட்ட விரும்புகிறேன்.

இதுவரை நாம் கூறியவற்றில் இந்நாட்டு முஸ்லிம்களின் பாரம்பரியத்தின் சில முக்கியமான பொது நிலைகளை மட்டும் கோடிட்டுக் காட்ட முயன்றுள்ளோம். இத்துறையில் வருங்காலம் விரிவான ஆய்வுகளைக் கொணரும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

(நன்றி: யாழ் பிறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்பரீன்

எழிலார் இலங்கைத் தீவின் திரைகடல் தழுவும் தென் மேற்குக் கரையோரத்தே காண்பவர் உள்ளத்தை அள்ளும் காட்சி ஒன்று உள்ளது. அங்கே முப்புறம் ஆழிசூழ முன் வந்தேறிய மக்களை நினைவுறுத்தும் மலைக்குன்று ஒன்று உள்ளது. கவின் மிகும் அக் குன்றம் தாங்கி நிற்கும் இஸ்லாமிய சிற்பக்கலை மிளிரும் இறைவனது இல்லமாம் பள்ளிவாயிலை இக்கரை மருவிச்செல்லும் பெருஞ்சாலைப் பயணிகள் காணத்தவற மாட்டார்கள். இப் பள்ளிவாயிலில் தான் இந்நாட்டில் தீன்மறை வளர்த்த திருவுடையார் ஷெய்கு அஷ்ரப் ஒலியுல்லாஹ் அவர்கள் அடங்கி உள்ளார்கள். இம் மகானைப் பற்றி அவர்களுடைய புகழ் பரவும் கெச்சிமலைத் தேவாரம் பாடிய மக்கூன் புலவர் அப்துல் ஹமீது மரைக்கார் அவர்கள் பின்வருமாறு இசைத்துள்ளார்கள் :-

''மறையவர் நாளும் வாழ்த்த
மலையெனும் கெச்சி மீதில்
குறையற வாழு மெங்கள்
கருணையங் கடலதான
இறையவரே நும் பால் வேண்டும்
இரப்புகட் கிரங்கியாள்வீர்
அறைய நல் லருளார் ஷைகு
அஷ்ரபு ஒலியுல்லாஹ்வே''.

அரேபியரின் வர்த்தகம்

கெச்சிமலையைத் தன்னகத்தே கொண்ட வேருவலைத் துறைமுகத்தின் மீது எமது சிந்தையைச் செலுத்துவோமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால், எமது மனோரதம் சரித்திரச்சாலையில் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்து செல்லும் என்பதில் ஐயமில்லை. எமது மூதாதையர்களான அரேபியர்களுக்கும், அப்பட்டினத்திற்குமுள்ள தொடர்பு மிகத் தொன்மையானதாகும். இஸ்லாம் தோன்றுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பிருந்தே அரேபியர்கள் வர்த்தக நிமித்தம் இவ்விலங்கைத் தீவை நாடி வந்துள்ளார்கள். சரந்தீவு என்று அவர்கள் சிறப்பித்துக் கூறிய இலங்கைத் தீவின் கண் விலைமதிக்கவொண்ணாத முத்துக்கள், இரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள் முதலியன அரேபியர்களின் கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாக, இந் நாட்டிற்கும் ஐரோப்பாவிற்குமிடையிலான பெரும் வர்த்தகத்திற்கு அரேபியர்கள் முக்கிய பொறுப்பாளிகளாக இருந்து வந்தனர்.

வேருவலைத் துறைமுகம்

தற்காலத்திலே வேருவலை என்றழைக்கப்படும் இத்துறைமுகம் அரேபியர்கள் மூலம் பல பெயர்களைப் பெற்றுள்ளது. பர்பரி (Berberi) பர்பரீன் (Berberyn) பார்பெர்ரி (Barberry) என்றெல்லாம் இத்துறைமுகத்திற்குப் பெயர்கள் உண்டு. இத் துறைமுகம் மிகப் புராதனமானது என்பதற்கும் அரேபியர்கள் இந் நகரோடு தொன்மைத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கும் சான்றுகள் பலவுள.

தற்காலத்தில் வேருவலை என்றழைக்கப்படும் துறைமுகம் கி. பி. 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த தொலமியின் தரைப் படத்தில் குறிப்பிடப்படும் நுபர்த்தா கிவிடாஸ் Nubartha Civitas) என்ற துறைமுகமாக இருக்கவேண்டுமென்று திரு. ஜே. ஆர். சின்னத்தம்பி அபிப்பிராயம் தெரிவிக்கின்றார். நுபர்த்தா கிவிடாஸ்தான் வேருவலை நகரமாக இருக்க வேண்டுமென்பதற்கு அவர் பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறுகிறார்:

"இலங்கைத் தரைப்படத்திலே வேருவலை அமைந்துள்ள இடமும், தொலமியின் தரைப்படத்திலே நுபர்த்தா கிவிடாஸ் அமைந்துள்ள இடமும் ஏறத்தாழ ஒன்றாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் ஸ்மித் (William Smith) அவர்களுடைய தொல் அகராதிப்படி அஸானியா (Azania) அல்லது பார்பாரியா (Barbaria) என்னும் பிரதேசம் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில் உள்ளதாகும்.

'என்சைக்லோபீடியா பிரிட்டானிக்கா'' என்ற ஆங்கிலக் கலைக் களஞ்சியப்படி ''நுபியன்'' என்பது, நைல் பள்ளத்தாக்கிலுள்ள ஓர் இனத்தவருக்குரிய பெயராகும். இந்த நுபியன் மக்களுடைய மொழி பார்பரீ என்பதாகும். தொலமி வரைந்துள்ள இலங்கைத் தரைப்படத்தில் இத் தீவில் தென் மேற்குப் பகுதியிலுள்ள ஓர் ஆறு அஸானியா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே நுபர்த்தா என்று குறிப்பிடப்படும் வேருவலை, ஆபிரிக்க நைல் நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தோடு தொடர்புடையதாயிருக்கிறது'' என அபிப்பிராயப்படுகிறார் சின்னத்தம்பி. மேலும் நுபர்த்தாவில் மிகத் தொன்மையான காலந்தொட்டு அரேபியர்கள் குடியேறியிருந்தார்களென்பது தெளிவாகின்றது. திரு. சின்னத்தம்பி அவர்கள் தரும் விளக்கப்படி நுபர்த்தாவில் குடியேறியவர்கள் அபிஸீனியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கருத வேண்டும்.

இப்னு பத்தூதா கூறியன

திரு. சின்னத்தம்பி அவர்களின் கருத்துக்களை இங்கு குறிப்பிடும்போது இலங்கையில் அபிஸீனியர்கள் வந்தேறியதற்குப் பிரபல தேசசஞ்சாரியாம் இப்னு பத்தூதா (14ம் நூற்றாண்டு) அவர்களின் பின்வரும் கூற்று ஆதாரமாய் அமைவதை இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமாகும்.

''நாங்கள் பின்னர் தினுவாரிலிருந்து 18 மைல்களுக்கப் பாலுள்ள காலி எனும் சிறிய நகரத்திற்குச் சென்று அங்கிருந்து கலம்பு (கொழும்பு) நகருக்குப் பிரயாணம் செய்தோம். இது இலங்கையின் மிகப் பெரியதும், வனப்பு மிக்கதுமான நகரங்களுள் ஒன்றாகும். இந்நகரில் ஜலஸ்தி என்ற கடல் தலைவன் (வஸீர்) வசிக்கின்றார். இவரின் கீழ் சுமார் 500 அபிஸீனியர்கள் உள்ளனர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்காபிரிக்கப் பிரதேசத்திற்கும் இலங்கைக்கும் இடையில் தொன்றுதொட்டே தொடர்பு இருந்து வந்திருக்கக் கூடுமென்பதை இப்னு பத்தூதாவின் கூற்று கோடிட்டுக் காட்டுகிறது.

ஆதிக் குடியேற்றத்துறை

இலங்கையில் முஸ்லிம்களின் ஆதிக் குடியேற்றத் துறைகளுள் வேருவலையும் ஒன்றெனபதை சர். அலெக்சாண்டர் திட்டமாகக் குறிப்பிடுகிறார். அவர் கூற்றுப்படிக்கு கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரேபியர்கள் திருக் கோணமலை, யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னார், குதிரை மலை, புத்தளம், கொழும்பு, வேருவலை, காலி ஆகிய பிரதேசங்களில் குடியேறினார்கள்'.

ஏழாம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னரே முஸ்லிம் வர்த்தகர் கூட்டமொன்று இலங்கையில் குடியேறிவிட்டதென்று பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். அவர் குறிப்பிடும் வர்த்தகக் குழு தொன்மைத் தொடர்பு மிக்க வேருவலையில் குடியேறி இருக்கக்கூடு மென்று சிந்திக்கவும் இடமுண்டு. இதற்கேதுவாக அரேபியர்களுடைய கீழைத்தேய வர்த்தக மார்க்கத்தையும், அவர்களுடைய கப்பல்களின் பெரிய அளவினையும் கருத்திற் கொண்டு பேராசிரியர் நஃபீஸ் அஹ்மது அவர்கள் பெரும்பாலான அரேபியக் கப்பல்கள் மன்னார், மாதோட்டம் ஆகிய துறைகளைவிடக் காலியையும், அதற்கருகிலுள்ள துறைகளையுமே வந்தடைந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

பதினான்காம் நூற்றாண்டில் இலங்கையில் தான் தரிசித்த பலவிடங்களைப் பற்றிக் குறிப்பிடும் இப்னு பத்தூதா காலி, கொழும்பு ஆகிய கரையோர நகர்களைப் பற்றிக் குறிப்பிட்டும் வேருவலையைக் குறிப்பிடாமலும் விட்டிருப்பதைக் கொண்டு இந்நகரில் முஸ்லிம்களின் தொன்மைக் குடியேற்றம் ஏற்பட்டிருக்க முடியாதென்று இலங்கைப் பல்கலைக்கழக அறபுத்துறைப் பேராசிரியர் கலாநிதி எஸ். ஏ. இமாம் கருதுகின்றார்கள். இதுபற்றி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியக் கருத்து

"அரேபியர்கள் முதன் முதலாக வேருவலை அமைந்துள்ள இடத்திற் குடியேறினார்களென்றதொரு பாரம்பரியக் கருத்து இந்நாட்டு முஸ்லிம்களிடையே நிலவி வந்துள்ளது. ஆனால் கி. பி. 851ல் இலங்கை வந்த வணிகர் சுலைமான் முதல் கி. பி. 1341ல் இலங்கையைத் தரிசித்த இப்னு பத்தூதா வரையிலான எந்தவோர் அறபுக் கடலோடியும் இக்கருத்தை வலியுறுத்தக் கூடியதாக எதுவுமே குறிப்பிடவில்லை. இப்னு பத்தூதா இந்நாட்டுக்கொரு சமயப் பயணியாகவே வருகை தந்தாரென்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே சமயப்பற்றுதலின் காரணமாக அவர் இந்நாட்டிலிருந்த எந்தவொரு முஸ்லிம் குடியேற்றத்தையோ, புனிதத் தலத்தையோ குறிப்பிடாமல் விடவில்லை. மாருக மிகவும் தூரமான இடங்களிலுள்ள புனிதத் தலங்களை அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இத்தேசாந்திரி காலியிலிருந்து கொழும்பிற்குக்கரையோரமாகப் பிரயாணம் செய்துள்ளார். எனவே, வேருவலையில் முஸ்லிம்களின் குடியேற்றமொன்று இருந்திருக்குமாயின், அவர் பிரயாணஞ் செய்த வழியிலேயுள்ள அக்குடியேற்றத்தை அவர் காணத் தவறியிருக்க மாட்டார்."

ஆனால், இக்கருத்துக்கு மாருகப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கொழும்பைச் சேர்ந்த ஜனுப் எம். ஏ. சி. முஹம்மது என்பவர் வேருவலையிலுள்ள ஒரு தொன்மையான மையவாடியில் 'ஹிஜ்ரி 331' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மீஸான் கல்லொன்றைக் கண்டெடுத்துள்ளார் என்ற செய்தி 1906ம் வருடம் அக்டோபர் 15ம் திகதிய 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது, இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் கி. பி. 1010ல் சிங்கள மன்னரொருவரால் வேருவலையைச் சேர்ந்த பெரிய முதலி மரிக்காருக்கு வழங்கப்பட்ட செம்புப் பட்டயத்தில் மரிக்கார் தென்னகத்திலிருந்து நெசவாளிகள் சிலரைக் கொணர்ந்தமைக்காககவும், வேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைத் துறைமுகத்தைக் கண்காணித்து வந்தமைக்காவும் அவருக்குப் பல அரிய சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

இப்னு பத்தூதா வேருவலையைப் பற்றிக் குறிப்பிடாமைக்குக் காரணம் அவர் இந்நகர் வழியாகவன்றி வேறு மார்க்கமாகச் சென்றமையாயிருக்கக்கூடும். இப்னு பத்தூதாவின் தென்னிலங்கைச் சஞ்சாரம் பற்றிக் குறிப்பிடும் ஹியூ நெவில் அவர்கள் இப்பிரயாணி காலிக்குச் செல்லவில்லை என்றும், தினவரிலிருந்து கொழும்பிற்குத் தென்மேற்குக் கரையோரமாக அவர் பிரயாணஞ் செய்யவில்லையென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் கூறுவதாவது:

"இந்தப் பிரயாண மார்க்கம் தெவுந்தறையிலிருந்து (தினவர்) புராதனத் துறைமுகமாகிய வெலிகாமம் ஊடாகவும், ஹினிதும கிராமத்தினூடாகவும் வெள்விட்டிக் கோறளை ஊடாகவும் களுத்துறைக்குச் செல்வதாயிருக்குமேயன்றி காலி நகருக்கு செல்வதன்று. காலி என்று கூறப்படுவது "களு-கங்க-தர"—களுத்தற என்பதன் சிதைவென்பதில் ஐயமில்லை".

சோனகர் (1927) என்ற நூலில் வெண்சண்டன் அவர்களின் பின்வரும் கூற்று முஸ்லிம்களின் ஆதிக் குடியேற்றம் வேருவலையாயிருக்குமென்பதை வலியுறுத்துகிறது.

"கி. பி. 60க்கு நேரான ஹிஜ்ரி 22ம் ஆண்டில் நான்கு கப்பல்களைக் கொண்ட ஒரு கூட்டம் மூன்று சுல்தான்மார்களை ஏற்றிக் கொண்டு எமனிலிருந்து உமர் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சியின் போது புறப்பட்டது.

இந்த சுல்தான்களில் ஒருவரான சதுருத்தீன் என்பவர் வேருவலையில் வந்திறங்கியதாகக் கூறப்படுகிறது."

வேருவலையில் முஸ்லிம்கள்

வேருவலையில் குடியேறிய முஸ்லிம்கள் காயல்பட்டினத்திலிருந்து வ்ந்தவர்களென்றும், இக்குடியேற்றம் 14ம் நூற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருண்டில் நிகழ்ந்ததென்றும் ஒரு கருத்து பரம்பரையாக நிலவி வந்துள்ளது. இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிசில் ஆற்றிய உரை ஒன்றில் கலாநிதி கே. டப்ளியூ. குணவர்தன அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

''பிற்காலத்தில் சலாகம மக்கள் அல்லது சாலியர் என்றழைக்கப்பட்ட நெசவாளிகள் 14ம் நூற்றாண்டளவில் இந்திய முஸ்லிம்களால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார்களென்பதற்கு ஜனவம்ச மரபுகள் சான்றுபகர்கின்றன. இக்கருத்தினைப் போர்த்துக்கீசியரின் ஆவணங்களில் காணப்படும் நம்பத்தக்க ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன. மேலும் 14ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வேருவலையில் நிகழ்ந்த குடியேற்றம் காயல்பட்டினத்து முஸ்லிம்களது என்பது பாரம்பரியமாக வழங்கிவரும் கருத்தாகும். காயல்பட்டினத்து முஸ்லிம் ஒருவர் கடற்கொள்ளையில் 15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈடுபட்டிருந்ததாக ''ராஜாவலிய'' குறிப்பிடுகிறது.''

வேருவலையில் 11ம் நூற்றாண்டிலேயே காயல்பட்டினத்து முஸ்லிம்களின் குடியேற்றம் ஏற்பட்டுவிட்டதாக நிலவிவரும் பாரம்பரியக் கருத்தொன்றையும் கலாநிதி டென்ஹாம், கலாநிதி ஆர். எல். புரோஹியர் போன்றோர் அறிவித்துள்ளனர்.

இப்னு பத்தூதா (14ம் நூற்றாண்டு) வேருவலையைக் குறிப்பிடாவிடினும், இதே காலப்பிரிவில் மற்றுமொரு பிரயாணியின் அனுபவம் இத்துறைமுகத்தில் முஸ்லிம்களின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதாயுள்ளது. ஜான் டீ மறிநொல்லி (John De Marignolli) என்ற இத்தாலியக் கடலோடி (கி. பி. 1349) வேருவலைத் துறைமுகத்தில் வந்திறங்கினார்.

''இறைவன் கருணை வழி காட்டவும் எவ்வித ஆபத்துமின்றி இலங்கையின் துறைமுகங்களுள் ஒன்றான பெர்பெரிஸ் (Berberyn) (வேருவலை) துறையில் கரைசேர்க்கப்பட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கோயா ஜான் என்ற கொடியவன் ஒருவன் சட்டபூர்வமான அரசனுக்கு எதிராக அதிகாரம் செலுத்தி வந்தான். அவனொரு சபிக்கப்பட்ட முஸ்லிம் (Saracen) ஆவான். அவன் தன்வசமிருந்த பெரும் தனத்தின் மூலம் நாட்டின் இந்தப் பகுதியைத் தன் கைவசப்படுத்திக் கொண்டிருந்தான்.'

மறிநொல்லியின் கப்பல் சீனவிலிருந்து திரும்பி மலபார் கரையோரமாகச் செல்லும் வழியில் புயலில் சிக்குண்டு இலங்கையை நாடி வந்தது. வரும் வழியில் ஒரு முஸ்லிம் கடற்கொள்ளைக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டது. இக்கொள்ளைக்காரன் இப்னு பத்தூதா குறிப்பிடும் ஜலஸ்தியாக இருக்கக்கூடும். இதிலிருந்து தப்பியோடிய மறிநொல்லியின் கப்பல் வேருவலையை வந்தடைந்தது. கோயா ஜானும் மறிநொல்லியிடம் ஆசைவார்த்தைகள் கூறிக் கப்பலிலிருந்து விலை மதிப்புள்ள பண்டங்களைப் படிப்படியாகச் சூறையாடி விட்டதாக அப்பிரயாணி கூறியுள்ளார்.

வர்த்தகம் பற்றிய தகவல்

இதுவரை நாம் கூறிய ஆதாரங்கள் போக பண்டைச் சிங்கள இலக்கிய நூல்களில் வேருவலையையும் அதனைச் சார்ந்த மக்கூன் அளுத்காமம் ஆகிய நகரங்களையும் பற்றிய பல அரிய தகவல்கள் காணப்படுகின்றன. பதினுன்காம், பதினைந்தாம் நூற்றுண்டுகளில் எழுந்த பின்வரும் "சந்தேசய" (தூது) கவிதைகளிலிருந்து இப்பிரதேசத்தின் வர்த்தக வளத்தையும், இங்கு வந்திறங்கிய அரேபியர்களின் நடவடிக்கைகளையும் சாதாரணமாகக் கடலோடிகளின் தன்மையினையும் நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

பதினுன்காம் நூற்றுண்டிலே தோன்றிய திஸர சந்தேசய வேருவலையையும், மக்கூனையும் பற்றிப் பின்வருமாறு இசைக்கின்றது:

"செல்வம் கொழிக்கும் வேருவலை என்ற நகரின்மீது பறந்து செல்வாயாக. எண்ணற்ற "சேரு"ப் பறவைகளும், தேவப் பெண்களைப் போன்ற அழகிகள் பலரையும் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். பண்பு படைத்த வணிகர்கள் பல்லோரும் அங்குள்ளனர்.''

''என் அருமை நண்பனே! கீர்த்தியும் செல்வமும் பெருகி நிற்கும் மக்கொனேக் கிராமத்திற்குச் செல்வாயாக. தேவதைகள் போன்ற மயக்கங் கொண்ட மங்கையர்களை அங்கு காணலாம்.''

இப்பாடல்களிலே வேருவலைத் துறைமுகத்தின் ஓங்கு புகழ் பேசப்படுகின்றது. பண்புமிகு வர்த்தகர்களைப் பற்றிய குறிப்பு இங்கு கவனிக்கத்தக்கதாகும். வேறு சில பாடல்களில் இங்கு திரளும் வணிகர்களின் முரட்டுச் சுபாவங்களும் அமைதியற்ற போக்குகளும் வெகுவாகப் பேசப்படுகின்றன. இவற்றிலிருந்து இத்துறைமுகத்தில் பல்வேறு நாட்டவர்களும் மாறுபட்ட சுபாவம் படைத்தவர்களும் திரண்டிருக்கக் கூடுமென்று நாம் யூகிக்கக் கூடியதாயிருக்கிறது.

இதே நூற்றுண்டில் நான்காவது பராக்கிரமபாகுவின் ஆட்சியின் போது (கி. பி. 1440-1450) இயற்றப்பட்ட கிரு சந்தேசய எனும் கிள்ளை விடுதூதுக் காவியத்தில் வரும் இரு செய்யுட்கள் பின்வருமாறு:-

அழகிய மங்கையர்

''தோழனே மக்கோனே (மக்கூன்) கிராமத்தில் இனிய குரலோசையும், செவ்விதழ்களும் கொண்ட அழகிய மங்கையரைக் காண்பாயாக. இவ்வழகிகள் மக்களை அணுகி அவர்களை மயக்குகிறார்கள். அவர்களைக் காண்பதில் நீ உன் கண்களைப் பெற்ற பாக்கியம் பெறுவாய்''.

''கடலையடுத்துள்ள வேருவலைக்குக் களிப்புடன் வருவாயாக. இங்கு அழகிய சோனக வனிதையர் வாழ்கின்றார்கள். அங்காடிகளிலே பொன்னும் வெள்ளியும் மினுங்குகின்றன. பன்னிறக் கொடிகள் இல்லங்களை அலங்கரித்து நிற்கின்றன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்களிலிருந்து வேருவலைப் பிரதேசம் முஸ்லிம் குடியேற்றத்தின் வளமான வளர்ச்சிக்குச் சான்று பகர்வதாயுள்ளது. இந்தச் செல்வாக்கின் காரணமாகவே போர்த்துக்கீசியர் இந்நாட்டுக் கரையில் அடியெடுத்து வைத்த நாள் முதல் வேருவலை போன்ற துறைமுகங்களை அடிக்கடி தாக்கி வந்தனர்.

கோகில சந்தேசய எனும் மற்றுமொரு காவியத்திலே தரப்படும் விவரங்கள் வேருவலைத் துறைமுகம் இரத்தினக் கற்கள், முத்துக்கள் ஆகியவற்றிற்குப் பிரசித்தமாய் விளங்கியதைத் தெளிவுபடுத்துகின்றன. பாடல்கள் வருமாறு:-

"கண்கள் படைத்த பயனை வேருவலைக் கிராமத்தைக் காண்பதன் மூலம் அநுபவிப்பாயாக. எண்ணற்ற தென்னை மரங்களைக் கொண்ட சோலைகளும், எழில்மிகு பெரும் ஆலயங்களும் அங்கே உள்ளன."

பலவித அங்காடிகள்

"பலவிதமான அங்காடிகள் நிறைந்த வேருவலையைக் காண்பாயாக. தாரகைக் கூட்டத்தைப் போன்று மின்னும் முத்துக்களும், இரத்தினங்களும் நிறைந்த வண்ணப் பேழைகள் இவ்வங்காடிகளிலே நிரம்பியுள்ளன."

இப்பாடல்களிலிருந்து வேருவலைத் துறைமுகம் இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரட்டப்பட்ட பொருள்களுக்கும் ஒரு மத்திய சந்தையாக விளங்கியமை பெறக் கூடியதாயிருக்கிறது.

வேருவலை முஸ்லிம்களின் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடும் வென் சண்டிமன் இப்பிரதேசத்திற்கு நெசவுத் தொழில் வல்லுனர் சிலர் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விபரத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பதினைன்காம் நூற்றாண்டு வரை சிங்கள மக்கள் நெசவுத் தொழிலை அறியாதவர்களாயிருந்தார்கள். ஒரு சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர் யாராவதொருவர் இந்தியாவுக்குச் சென்று சில நெச வாளிகளைக் கொண்டு வருவாராஞல் தக்க வெகுமதியளிப் பதாகப் பிரகடனப் படுத்திஞர். வேருவலையைச் சார்ந்த சோனகரொருவர் இந்தியாவிலுள்ள சாலிய பட்டினத்துக் குச் சென்று அங்கிருந்து எட்டு நெசவாளிகளைக் கொண்டு வந்தார்.''

வென்சண்டிமனுடைய மேற்கண்ட கூற்று இதே விஷ யம் பற்றி எமர்ஸன் டெனன்ட் உடைய பின்வரும் கருத் துடன் ஒப்புநோக்கத்தக்கதாகும்,'

சாலியர் குடியேற்றம்

''காலிப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையான நாட் டுப்புற மக்கள் சாலிய சாதியைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஆதியில் இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் இருந்து இந்நாட்டிற்கு நெசவுத்தொழிலாளர்களாக 13ம் நூற்ருண்டளவில் வந்து பர்பரீனில் குடியேறியதாகத் தெரி யவருகிறது''.

இவ்வாறு குடியேறிய சாலியர்கள் பிற்காலத்தில் கரு வாப்பட்டை செதுக்குவதில் தேர்ச்சியுடையவர்களாக அத் துறையிலான வர்த்தகத்தில் பெருமளவு ஆதிக்கம் செலுத் தலாஞர்கள்.

கறுவா வர்த்தகத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது இங்கு நாம் கருவாப் பயிர்ச் செய்கையில் வேருவலைப் பிர தேசத்தின் முக்கியத்தைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். வேருவலையைச் சார்ந்த சில பகுதிகள் இன்னும் கறுவாத் தோட்டங்களென்று அழைக்கப்பட்டு வருகின்றன. எமர் சன்டெனன்ட் இலங்கையின் கறுவா வர்த்தகம் பற்றிப் பின் வருமாறு குறிப்பிடுகிருர்.

''நீர்கொழும்பு, கொழும்பு, பர்பரீன், காலி, மாத் தறை ஆகிய நகரங்களைச் சூழவுள்ள ஐந்து கறுவாத் தோட் டங்களின் தன்மையிலிருந்து இத்துறையிலான வர்த்தகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் விரிவை நாம் அறிந்து கொள்ளலாம். இத்தோட்டம் ஒவ்வொன்றும் சுமார் 15 முதல் 20 மைல் சுற்றளவைக் கொண்டதாயிருந்தது'.

ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு வேருவலை தொடர்ந்து ஆட்சியாளர்களின் கவனத்தைப் பெற்றுவந்தது. போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் பதிவேடுகளிலெல்லாம் இந்நகர் இடம்பெற்றே வந்திருக்கிறது. மேலும் பல சந்தர்ப்பங்களில் இத்துறைமுகம் கடுமையான தாக்குதல்களுக்குட்பட்டிருக்கிறது. இங்கு வாழ்ந்த முஸ்லிம்களுக்குப் பலமுறைகளில் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் விளைந்துள்ளதையும் நாம் சரித்திரக் குறிப்புகளிலிருந்து அறியக் கூடியதாயிருக்கிறது. சிறப்பாகப் போர்த்துக்கீசியர் ஒல்லாந்தர் காலத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அனந்தமாகும். அவர்களுள் கணிசமான தொகையினர் மக்கூன் வேருவலை, அளுத்காமம் ஆகிய நகர்களைத் துறந்து உட்பிரதேசங்களுக்கும், மலைநாட்டிற்கும் செல்லக் காரணமாயிருந்தது, ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பேயாகும்.

அறிஞர் சித்தி லெவ்வை

இவ்வாறுசுக் குடிபெயர்ந்த குடும்பங்களுள் இலங்கை முஸ்லிம்களின் அருந் தலைவர்களுள் ஒருவரான கண்டி நகர் அறிஞர் சித்தி லெவ்வையின் குடும்பமும் ஒன்றெனக் கருத இடமுண்டு. வேருவலைக்கு அண்மையில் உள்ள அளுத்காமத்தில் குடியேறிய முல்க் ரஹ்மதுல்லா என்ற அரேபிய முஸ்லிமின் வழித்தோன்றலே அறிஞர் சித்தி லெவ்வை என்று கூறப்படுகின்றது. முல்க் ரஹ்மதுல்லா வெந்துறைக் கணக்கர் குடும்பத்தில் திருமணஞ் செய்ததாகவும், பிற்காலத்தில் இக்குடும்ப வழிவந்தோர் வர்த்தக நிமித்தம் கண்டியை நாடிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

வேருவலை, அளுத்காமம், மக்கூன், பெந்தறை, வெளிப்பன்னை போன்ற ஊர்களிலே உள்ள பழம்பெரும் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பாரம்பரிய வரலாற்றில் முஸ்லிம்களின் குடியேற்ற உண்மைகள் பொதிந்துள்ளதென்பதில் ஐயமில்லை. இப்பிர தேசத்தில் மார்க்க ஒளி பரப்பிய ஞானிகளும், பண்டைச் சிங்கள மன்னர்களின் அரண்மனைகளில் இடம்பெற்ற அரச மருத்துவர்களும், தம் பண்டப் பொதிகளோடு பெருமறையாம் இஸ்லாத்தையும் ஏந்திச் சென்று நாடெங்கிலும் பரப்பிய வர்த்தகர்களும், வேருவலைத் துறைமுகம் கண்டவர்களென்பதை அப்பிரதேசக் குடும்பங்களின் வரலாற்று ஆய்வு வருங்காலத்தில் மேன்மேலும் தெளிவுபடுத்துமென் பது எமது நம்பிக்கையாகும்.

இந்நாட்டின் நவீன போக்குவரத்துச் சாதனங்கள் பெருகுவதற்கு முன், ஏன் ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்பு வரையிலும்கூட வேருவலை முஸ்லிம்கள் நாடெங்கும் துணிப் பொதிகளுடன் சென்று வியாபாரம் செய்து வந்ததை நம் மில் பலர் அறிவோம். இவ்வாறு சென்றவர்கள் கிராமப் புறங்களிலே தமது சமயத் தரீக்காக்களை நிறுவி வந்துள் ளமை இந்நாட்டில் இஸ்லாமிய சமயப் பரம்பல் துறை யொன்றின் பாரம்பரியத்தைச் சுட்டுவதாகவுள்ளது.

வேருவலையில் முஸ்லிம்களின் குடியேற்றம் பற்றிய ஆய் விற்கு இவ்வூரிலுள்ள பழம் பெரும் குடிகளின் வரலாறு முக்கியமான ஆதாரங்களை வழங்க முடியுமெனினும் தற் சமயம் இவ்வகையில் உறுதியான தகவல்களைப் போதிய அளவு பெறுவது எளிதன்று.

பூர்வீக வைத்தியர்கள்

தற்போது கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அதிப ராய்க் கடமையாற்றும் வேருவலையைச் சேர்ந்த ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரிக்கார் குடும்பத்தினர் பரம்பரையாக வைத்தியர்களாவர். இக்குடும்பம் பற்றி கத்தீப் முகம்மது அப்துல் ஜப்பார் அவர்கள் இக்குடும்பத்தினர் கைவசமுள்ள ஒரு சான்றிதழில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சகலமாகிய சனங்களுக்கும் கத்திப் முகம்மது அப்துல் ஜப்பார் என்ற நான் உண்மையோடு உறுதியாகச் சொல் கிறதாவது— சோனகர்கள் என்று வழங்கி வரும் எமது சாதி களில் வைத்தியமென்ற உடை அநேகர்கள் அணிந்திருந்தா லும் இதன் கீழ் காணப்படுகிறவர் இலங்காபுரியில் வேரு வலையில் பூர்வீக வைத்தியர்களின் புத்திர வழியாளியாவர். இவரின் பேர் அலியா மரைக்கார் ஹக்கீம். இவர் தகப்பனார் அபூபக்கர் லெப்பை மரைக்கார் மேஸ்திரியார் அவர்கள்.

"இவர்களின் தகப்பன் காசீம் லெப்பை மரிக்கார் மேஸ் திரியார், அவர்களின் தகப்பனார் முகம்மது கண்டு மேஸ்தி ரியார். இவர்களெல்லாம் பூர்வீக வைத்தியர்கள். ஆனால் இவர் மிகவும் கெட்டியான பண்டிதர். ஆனாலும் என் பிள்ளைகளுக்கும் இவருடைய அநேக அவிடங்களால் மிகுத மாகவே சுகமடைந்தேன். ஆகையால் இவரைக் கைவிடாது இவரிடத்தில் உண்டான அவிடங்களை ஒவ்வொருவரும் பாவித்து சுகமடையுங்கள். உண்மை சொல்லி நசலை அறிந்து அவிடங்களைத் தருவதிலும் நசல் துன்பங்களின் பிசகுதல்களை அறிவிப்பதிலும் இவர் நல்ல உண்மை உள்ளவர் என்பதில் சக்கில்லை."

நெசவாளர் குடும்பம்

இதுதவிர சர். அலெக்ஸாண்டர் ஜொன்ஸ்டன் (1872) குறிப்பிடும் ஒரு வேருவலைக் குடும்பத்தின் விவரமும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். அவர் குறிப்பிடுவது இந்தியாவி லிருந்து முதன் முதலாக நெசவாளிகளை இலங்கைக்குக் கொணர்ந்து, அக்காலத்து அரசனிடம் பல சலுகைகளைப் பெற்றதொரு குடும்பமாகும்.

"இக்குடும்பத்தின் தலைவர் 1806ம் ஆண்டில் மருத்துவப் பகுதியின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். இந் நாட்டு மக்கள் அவர் மிகத்திறமை வாய்ந்த மருத்துவரெ னக் கருதினர். சுமார் ஏழெட்டு நூற்றாண்டுகளாக அவரது குடும்பத்தில் அரிதான மருத்துவ நூல்களின் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று இருந்து வருகிறது. இக் குடும்பத்தில் பரம்பரை யாக ஒருவரேனும் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு வந்துள் ளார்'' என்று ஜொன்ஸ்டன் கூறுகிருர்.

மற்றும், அளுத்காமத்தைச் சேர்ந்த மற்றுமொரு பிர பலமான குடும்பத்தில் தோன்றிய ஹாமிதுப் புலவர் தமது இபுலீசு படைப்போர் என்ற அருமையான கவிதை நூலில் தரும் தம் குடும்ப விளக்கம் சிறப்பு மிக்கதாகும். நாம் ஏற் கனவே குறிப்பிட்டுள்ள வெந்துறைக் கணக்கர் குடும்ப வழி வந்த அறிஞர் சித்தி லெவ்வையின் குடும்பத்துடன் ஹாமி துப் புலவருக்குள்ள தொடர்பு பின்வரும் பாடலில் காணக் கூடியதாகவுள்ளது.

''அந்தணர் வாக்குணர்ந்தல்
காமநன்னகரில்வாழும்
வெந்துறை மரைக்கார்
கோத்ர வழியினிற் கணக்கர் மீருன்
சுந்தரப் புதல்வரான
செய்கு லெவ்வை மரைக்கார்
சந்ததி அப்துர்ரஹ்மான்
லெவ்வையின் தோன்றலானேன்''

இதுபோன்ற குடும்பங்களின் வரலாறு ஆய்வாளர்களின் கவனத்தைப் பெறவேண்டியது அவசியமாகும்.

பர்பரீன் கிராமம்

இலங்கை 16ம் நூற்றூண்டில் போர்த்துக்கீசியர் ஆட்சி யிலிருந்த பொழுது பெர்ணுவோடி குவேரோஸ் என்ற கிறித் துவப் பாதிரியார் வேருவலே பற்றிப் பின்வருமாறு குறிப் பிடுகிருர்:

''அலிக்காவோ என்ற இடத்திலிருந்து சற்றுத் தூரத் திலே பர்பரீன் என்ற ஒரு பெரிய கிராமம் உண்டு. பர்பரீ என்றே இக்கிராமத்தை அழைப்பது தகும். ஏனென்ருல்

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே அரேபிய மக்கள் அதாவது சோனகர்கள் நிறைய உள்ளார்கள்''

அலிக்காவோ என்று இங்கு கூறப்படுவது தற்காலத்து அளுத்காமம் ஆகும். மேலும் குவேரோஸ் பாதிரியார் தமது குறிப்புகளில் இந்த மக்கள் (அதாவது சோனகர்கள்) மிகுந்த செல்வாக்கோடு இருந்ததாகவும், நாட்டை ஆட்சி செய்த போர்த்துக்கீசியரிடம் அவர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்ததென்றும் கூறுகிறார். மேலும், இச்சோனகர்கள் பர்பரீன் வழியாகப் பல உள்நாட்டுக் கிராமங்களிலே சென்று குடியேறி உள்ளார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு இப்பாதிரியார் குறிப்பிடுவது வேருவலைக்கு அண்மையிலுள்ள அளுத்காமம், துந்துவை, வெளிப்பன்னை முதலிய கிராமங்களாகவும், உடுநுவரை, ஹெம்மாத்தகம, அக்குறணை போன்ற மலைப்பிரதேசக் கிராமங்களாகவும் இருக்க வேண்டும்.

போர்த்துக்கீசியத் தலைவன் அந்தோனியோ மொனிஸ் பறேத்தோ (Antonio Moniz Barreto) 1574ம் ஆண்டில் மக்கூன், வேருவலை, அளுத்காமம் ஆகிய விடங்களைத் தாக்கி, கறுவா, மிளகு, கொப்பரா முதலிய பொருட்களுடன் கரையோரத்தே நின்ற பல கப்பல்களை எரித்து நாசமாக்கினன்.

1578ம் ஆண்டில் கொழும்பில் படைத் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட சம்பாயோ (Sampayo) சிறுபடையொன்றை டி சூஸா என்பவரின் தலைமையில் அனுப்பி வேருவலைத் துறையில் பல கப்பல்களைத் தீயூட்டி நாசப்படுத்தினன். இக்கப்பல்களுள் ஒன்று செங்கடல் பிரதேசத்துக்குக் கறுவா ஏற்றிச் செல்லத் தயாராயிருந்ததாகும். அதே ஆண்டில் மீண்டும் இத்துறைமுகம் அகஸ்தினோ நூனெஸ் என்ற தலைவனுல் தாக்கப்பட்டுப் பல கப்பல்கள் அழிவுக்குள்ளாகின.

1617ம் ஆண்டில் பறேத்தோ என்ற மற்றுமொரு போர்த்துக்கீசியத் தலைவன் வேருவலையைத் தாக்கி அவ்வூரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோனக முதலியாரையும், அவருடைய உறவினர்கள் எல்லோரையும் கொன்று விட்டான்.

போர்த்துக்கீசியருக்கும் சிங்கள மன்னர்களுக்குமிடையிலான ஆதிக்கப் போராட்டங்களிலும் வேருவலைத் துறைமுகம் பாதிப்புக்குள்ளாகியது. உதாரணமாக, பேதுரு அல்போன்ஸோ ஆராச்சி என்ற படைத்தலைவன் இந்நகருக்கு விளைத்த சேதத்தைக் குறிப்பிடலாம். இவ்வேளையில் ஷெய்கு அஷ்ரப் வலியுல்லா அவர்கள் அடங்கியுள்ள கெச்சிமலைப் பள்ளி கொள்ளையடிக்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் கெச்சிமலையைக் கைப்பற்றி அங்கு கோயிலொன்றை நிறுவ அவ்வந்நியர் முயன்று தோல்வி கண்டதை ஷெய்கு அஷ்ரப் வலியுல்லா அவர்கள் மீது இயற்றப்பட்ட முனாஜாத்திலுள்ள பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது—

''நெறியுட னமர்ந்து வாழும்
மலையினைக் கண்டு முங்கள்
குறி யுணராமற் கோயிற்
குயிற்றவென் றடர்ந்து வந்த
கிரியகக் குபிரர் நெஞ்சங்
கெடிகொள வடித்து யாரும்
அறியவே துரத்தும் சைகு
அஷ்ரபு வலி யுல்லாவே''

வர்த்தகப் போட்டி

இவ்விதமான அரசியல், வர்த்தக ஏற்றத் தாழ்வுகளுக்கு ஒல்லாந்தர் காலத்திலும் ஓரளவு ஆங்கிலேயர் காலத்திலும் வேருவலை இலக்காகியே வந்திருக்கிறது. இவ்வித நடவடிக்கைகள் ஆரம்பத்தில் மும்முரமாக இருந்தமைக்குக் காரணம் ஐரோப்பியருக்கும், அரேபியருக்குமிடையிலான கடுமையான வர்த்தகப் போட்டியும், பகைமையுமேயாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி உறுதியான நிலையினைப் பெற்ற பிறகு இத்துறைமுகம் தடைகளின்றி இயங்கி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், இதன் முன்னைய உயர் நிலை நீடிக்கவில்லையென்றே கூறவேண்டும். ஆங்கிலேயர் மேற்கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் இத்துறையின் நிலையிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி விட்டதென்று கூறலாம். 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வேருவலை பற்றிய பின்வரும் குறிப்புக்கள் இத்துறைமுகத்தின் செல்வாக்கு இக்கால கட்டத்திலும்கூட முற்றாகத் தேய்ந்துவிடவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

றொபர்ட் பெர்சிவல் (Robert Percival) என்பவர் எழுதிய குறிப்புக்களிலே (1803) வேருவலையைப் பற்றிப் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. பேர்சிவல் கூறுகின்றார்—
"களுத்துறையிலிருந்து சுமார் ஆறுமைல் தூரத்திலே பர்பரீன் என்ற சிறு கிராமம் ஒன்றுள்ளது. பர்பரீனில் பிரதானமான தொழிற்சாலை ஒன்றுள்ளது. அங்கு தென்னைத் தும்பிலிருந்து தேடாக்களும், கயிறுகளும் பெருமளவில் செய்யப்படுகின்றன. இவை துறை முகங்களுக்கு வரும் கப்பல்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன."

தும்புத் தொழில்கள்

இதே காலப்பிரிவில் இலங்கைக்கு வருகை தந்த மரியா கிரஹம் (Maria Graham) என்ற ஆங்கிலேய மாதொருவர் வேருவலையைப் பற்றி விரிவானதொரு விளக்கத்தை எமக்கு அளித்துள்ளார் (1809). றொபர்ட் பெர்ஸிவல் குறிப்பிட்ட தும்புத் தொழில்களின் சிறப்பினை மரியா கிரஹம் உறுதிப்படுத்துகின்றார். மரியா கிரஹம் வேருவலையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்—

"பர்பரீன் ஒரு முஸல்மான் கிராமமாகும். இவ்வூரின் முதலியார் அவர்களும் ஒரு முஸல்மான். இவ்வூர் மக்களில் பெரும்பாலோர் கைப்பணியில் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பலவகையான உலோகங்களிலிருந்து பொருட்களைச் செய்வதில் திறமை வாய்ந்தவர்கள். நாங்கள் அவர்களால் செய்யப்பட்ட பல வாட்களையும், குத்துவாட்களையும், இவைகளை வைக்கும் உறைகளையும் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டோம். அவையனைத்தும் திறமையான வேலைப்பாடுடையன."

மரியா கிரஹம் அவர்கள் கெச்சிமலை பற்றி வருணிக்கும் பொழுது, அந்தக் குன்று பெருமளவு கடலால் சூழப்பட்டுள்ளது என்றும், அது வனப்புமிக்கது என்றும் குறிப்பிடுகின்றார். அவர் அந்தக் குன்றின் ஒரு பகுதியிலே நான்கைந்து தென்னை மரங்களுக்கண்மையில் ஒரு முஸ்லிம் பெரியாரின் (Saint) அடக்க ஸ்தலம் (கபுறடி) இருப்பதாகக் கூறுகிறார். இதுவே ஆத்ம ஞானி ஷெய்கு அஷ்ரப் வலியுல்லாஹ் அவர்களது அடக்கத்தலமாகும்.

நாம் மேலே எடுத்துக் காட்டிய பிரயாணிகளுடைய கூற்றுக்களிலிருந்து பர்பரீன் எனப்படும் வேருவலை மிகச் சிறந்த துறைமுகமாக இருந்தது மாத்திரமன்றி இங்கே பெருமளவில் தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டிருந்ததென்பது தெளிவாகின்றது. பெரும் பண்டசாலைகளும் தொழிற்சாலைகளும் இங்கு அமைந்திருந்தன. இதன் காரணமாக, இங்கு வாழ்ந்த அரேபிய சந்ததியினராகிய சோனகர் மிகுந்த செல்வாக்குடையவர்களாக இருந்தார்களென்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

கெச்சிமலைப் பள்ளி

இன்று நாம் காணும் கெச்சிமலைப் பள்ளிவாயில் இவ்விருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டப்பட்டதேயாகும். இப்பள்ளி வாயிலில் மகான் ஷெய்கு அஷ்ரப் வலியுல்லா அவர்கள் அடங்கியுள்ள பகுதி ஹிஜ்ரி 1327 ஆம் ஆண்டிலும் மற்றப்பகுதி 1340ம் ஆண்டிலும் புதுப்பித்துக் கட்டப்பட்டதாக அறியக் கிடக்கிறது.

இந்நாட்டில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்களில் ஒன்றாகவும், வர்த்தகத் துறையிலே வளமானதொரு வரலாற்றினைக் கண்ட பட்டினமாகவும் வேருவலை சம்பாதித்த கீர்த்தியினைவிட இஸ்லாத்தின் மெய்யொளியைத் தொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு இலங்கையில் பரப்பியதும் பரப்பிக்கொண்டிருப்பதுமான ஆத்மிகத் தலைமையையே இங்கு சிலாகித்துப் பேசக்கூடியதாகவுள்ளது.

அரசியல் ஆதிக்கத்தில், வர்த்தக வளத்தில் எல்லாம் மாறுபடும் நிலைகளைக் கண்ட இப்புராதனப் பட்டினம், அல்லாஹ்வின் தூதினைப் பரப்புதற்கு இங்கு வந்தடைந்த ஆத்மஞானிகள் பலரின் இணையற்ற சேவையின் விளைவாக, அன்று போல் இன்றும் இஸ்லாமிய அறிவுக்கதிர் பரப்பும் கலங்கரை விளக்கமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

திருமறையின் தூதையும் திரு நபி (ஸல்) அவர்களின் ஹதீதுகளையும் பல நூற்றுண்டுகளாகப் பேணிப் பரப்புவதில் வேருவலையிலுள்ள கெச்சிமலை, புஹாரி ஆகிய தக்கியாக்கள் அளவற்ற பணிபுரிந்து வந்துள்ளன. இவ்விரு தக்கியாக்களும் பல அரிய இலக்கியப் படைப்புகளுக்கு வழி வகுத்துள்ளன. இவற்றுள் ஒரு சில மாத்திரமே எமது கைக்கெட்டியுள்ளன. அவற்றின் மூலம் கெச்சிமலையமர்ந்த மகான் செய்கு அஷ்ரப் வலியுல்லாஹ் அவர்களின் நற்பணி குறித்தும், புஹாரித் தக்கியாவின் நாயகரும், திருமக்காவில் அடங்கியுள்ளவருமான ஷெய்கு முஸ்தபா வலியுல்லாஹ் அவர்களின் சிறப்புப் பற்றியும் நாம் தெளியக்கூடியதாகவுள்ளது. மற்றும் வேருவலையில் அடங்கியுள்ள பிச்சை பாவா ஆலிமென்று பேர் வழங்கும் ஷெய்கு இஸ்மாயிலிபுனு அப்துல் காதிறு ஆலிம் சாகிபு, அளுத்காமத்தில் அடங்கியுள்ள ஷெய்கு ஹஸன் வலியுல்லாஹ் போன்றோரைப் பற்றியும் அறிய ஏதுவாகிறது.

மேலே நாம் குறிப்பிட்ட விவரங்கள் மீருன் சாகிபுப் புலவரின் ஷெய்கு முஸ்தபா வலி பேரிலான முனாஜாத்திலிருந்தும், மக்கூனைச் சேர்ந்த அப்துல் ஹமீதுப் புலவரின் தோத்திரப் புஞ்சத்திலிருந்தும் வேருவலை அலியா மரிக்கார் ஹக்கீம் அவர்களின் முனாஜாத்திலிருந்தும் பெறக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரான் சாகிபு அவர்கள் தாம் இயற்றிய முனஜாத்தை அக்காலத்தில் காலியில் தங்கியிருந்த தென்னகத்து மாப்பிள்ளை லெப்பை ஆலிமெனும் ஷெய்கு செய்யிது முகம்மதிப்னு அகமது அல்லாமத்து ஒலியுல்லாவைக் கொண்டு சரி பார்த்துப் பதிப்பித்துள்ளார்கள்.

ஆத்ம ஞானிகளின் பணி

இனி, இவ்வாத்ம ஞானிகளின் பணிபற்றி ஒரு சில பாடல்களிலிருந்து அறிவோம்.

ஷெய்கு அஷ்ரப் வலியுல்லாஹ் அவர்கள் பேரில் அப்துல் ஹமீதுப் புலவர் இயற்றிய முனஜாத்தில் பின்வரும் பாடல்கள் காணப்படுகின்றன.

"இலங்கொளி மதியம் போன்றே
யிலங்கை யெத்திசையும் கீர்த்தி
துலங்கர சாளும் வல்ல
சுகிர்த சுல்த்தானென் றெந்தத்
தலங்களுள் ளோரும் வந்தே
சரண் பணித்துய்ய வாய்த்த
அலங்கிர்த ரான ஷைகு
அஷரபு வலி யுல்லாவே

மருளெனும் கறைக ளேதும்
மனத்துறை யாமல் மாற்றித்
தெருளெனும் கலைகள் யாவும்
செறிந்துநற் சுருதி நூலின்
பொருளெனும் நயங்க ளெல்லாம்
பொலிவுறச் செய்தீ மானின்
அருளெனு ளளித் தாள்
ஷைகு அஷ்ரபு வலியுல்லாவே.

இப்பாடல்களிலே கெச்சிமலை மகான் இஸ்லாமிய அறிவொளியை மக்களின் உள்ளங்களிலே வைத்து அதன் வழி இந்நாட்டின் எத்திசையிலும் புகழ் பரப்பி நின்றவாறு விளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகின்றது. சஹீஹ் புஹாரி, முஸ்லிம் ஆகிய நாயக நன்மொழிக்கிரந்தங்கள் அன்று போல் இன்றும் ஆழிசூழ் அழகொளிர் கெச்சிமலை தர்கா ஷரீபிலிருந்தும் வானோங்கி எழுந்து இந்நாட்டையே புனிதப்படுத்தும் நிலையை நாம் எண்ணும் போது இச்சரந்தீவு பெற்றபேறு புலனாகும்.

இதே போன்று ஞானப் பணியேற்ற ஷெய்கு முஸ்தபா வலியவர்களை மீரான் சாகிபு வழுத்தும் பாக்களிலே அச் சங்கை மிகு ஷெய்கு அவர்களின் அரிய பண்புகள் பேசப் படுகின்றன.

''வாகு வரிசை யமலுடையீர்
வருவோ ரெவரா யினுமவரை
ஆக மகிழ்வா யுவந்திருப்பீ
ரருளார்கலை ஞானக் கடலே
மேகம் கவிந்தோர் சொலும் ஹதிது
விளக்கு முஸ்தபா வொலியே
மோக முறநும் மிருகதமென்
முழிகள் தெரிவ தெந்நாளோ.

தெரிதற் கரிய விறைவேதம்
தெளிந்த ஷைகே திருமணியே
குரிசி லேயிவ் வுலகரசாள்
கோமா னுவந்தே சென்றவிடம்
வரிசை பெறுவா ரென்றமொழி
வளர்க்கு முஸ்தபா வொலியே
பிரிய முறயா னுங்கள்பதம்
பெட்பிற் காண்ப தெந்நாளோ

நமது ஷெய்கு அவர்கள் அண்ணல் நபி அவர்களின் ஹதீதுக் கிரந்தமாகிய ஷஹீஹ் புஹாரியை விளக்கம் செய்து அந்தக் கோமானின் வழியே மக்களைச் செலுத்திய சிறப் பினை இப்பாடல்கள் நயமுறக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகானின் ஆற்றல்கள்

மேலும், ஷெய்கு முஸ்தபா வலியவர்கள் மீது அலியா மரைக்கார் அவர்கள் பாடிய பின்வரும் ஆசிரிய விருத்தத்தில் அவ்வாத்ம ஞானியின் ஆற்றல்கள் பேசப்படுகின்றன.

ஆதியிற சூல்புகழை யோதிப் புகழ்ந்ததிரு
வானந்த வறி வாளரில்
அவாவென்ற அம்மாறை விட்டுப் பிரிந்திட்ட
அண்ண லென வந்தவொலியே
பேதக மனத்துடைய பித்துப்பிடித்த நாய்
பீறிக் கடிக்க வதனுற்
பித்துப் பிடித்துழல லுற்ற வொருவன்றனுயிர்
பிரிகின்ற காலைதன்னில்
கோதகலு ஞானகலை யானகலி மாவினைக்
கூறிக் கொடுக்க வோதிக்
கோமானருட் கிருபை யீமானுறச் செய்த
கொண்டலென வந்த வொலியே
ஆதமரைக் காரீன்ற செல்வரெனு நாதரே
அலியா மரைக்கா ரென்ற
அடியனெனை நித்தமுஞ் சித்தம் வைத்தாளுவீர்
ஆரிபொலி முஸ்தபாவே.

இஸ்லாமிய சேவை

இந்த மகான்கள் தவிர "அஞ்சிறை வண்டுகளுண்டிசை பாடிடும், கஞ்சமலர்த் தடங்கள் சூழ் அழுக்காமத்தின் மன்னர்" ஆகிய ஷெய்கு ஹஸன் வலியுல்லா அவர்களது இஸ்லாமிய சேவையும் இப்பிரதேச மக்களுக்குக் கிட்டியது பெரும் பாக்கியமெனவே கூற வேண்டும். இம்மகானைப்பற்றி மக்கூன் ஹமீதுப் புலவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

துவமுற்ற தீன்மறையின்
சொல்லானதின் வழியே
தவமெத்த வேபுரியும்
ஷறஹான தின் மொழியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமுத்தி சேர்குருவாய்
நாடேற்றிடும் விழியே
அவமற்ற சைகு ஹஸன்
ஆலிம்வலி யுல்லாவே.

இவ்விதமாக இந்நாட்டு முஸ்லிம்களின் ஈடேற்றத்திற்காய் எண்ணிறந்த நன்மைகளைப் புரிந்து சென்ற மெஞ்ஞானிகளின் நினைவுகள் நமதுள்ளங்களிலே என்றும் பசுமையாயிருக்கச் செய்யக் கூடியன இறையருளால் இப்பிரதேசத்தில் தொடர்ந்து இஸ்லாமிய சமய கலாசார வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளேயாகும்.

இலங்கைத் தீவில் இஸ்லாம் காலூன்றத் துணை நின்ற தலங்களுள் முன்னணியில் துலங்கும் வேருவலைப் பிரதேசம் இதே காரணத்திற்காக எதிர் காலத்தில் வகிக்க வேண்டிய பொறுப்பும் மிகப் பெரிதாகும். இப்பொறுப்பினை இப்பிரதேசப் பெருமக்கள் உணரத் தவறவில்லையென்பதை விளக்கு முகமான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவது இந்நாட்டவர் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டுவதாயுள்ளன.

இலங்கையில் கடந்த காலத்தில் இப்பிரதேசம் எந்தளவு இஸ்லாமிய நெறியை வளர்த்து வந்ததோ அதே விதமாக இஸ்லாமிய பாரம்பரியத்தை மேன்மேலும் ஓங்கச் செய்யும் முகமாகச் சீனன்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நளீமிய்யா இஸ்லாமிய உயர் கல்விப் பீடம் வளர்ந்து வருவது கண்டு எமது உள்ளங்கள் மகிழ்வடைகின்றன. இந்நாட்டில் தீன் விளக்கம் செய்யத்தகுதி வாய்ந்த உலமாக்களை, மார்க்கப் புலவர்களை இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்களை, சட்டமேதைகளை எல்லாம் எமக்கு வழங்கும் களஞ்சியமாக இப்போதரு பீடம் மிளிர வேண்டுமென்பதே எமது அவாவாகும்.

நூலகமில்லாக் குறை

இன்று இலங்கை முஸ்லிம் அறிவுத்துறையிலுள்ள ஒரு பெரும்குறை ஓர் அங்கபூர்வமான இஸ்லாமிய நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமையேயாகும். அறிவுத் தேட்டத்திற்கு இன்றியமையாத இத்தகு நூலகமொன்றும் நளீமிய்யாவில் அனைத்திலங்கைக்கும் ஏன் தென்கிழக்கு ஆசியா முழுமைக்கும் உதவக்கூடிய வகையில் தற்போது அமைக்கப்பட்டு வருவது இறையருளேயாம்.

பர்பரீன் பெருந்துறையின் பண்டைப் புகழ் புத்தொளியுடன் மீண்டும் பரவ நளீமிய்யா வழி கோலுமாக, அப்பெரும் பணிக்கு அல்லாஹ் அருள் புரிவானாக, ஆமின்.

(நன்றி: தினகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்பரீன்

உசாவிய நூல்கள்

அப்துல் ஹமீது, மீ. தோத்திரப் புஞ்சம், மக்கூன், ஜெம் இய்யத்துல் ஜிபிரிய்யாச் சங்கம்,

அலியா மரிக்கார், அ. லெ. ம. ஹக்குத்த ஆலாவின் பெயரில் முனாஜாத்து. கொழும்பு, முஸ்லிம் நேசன், *1896*.

ஆமிது, அ. லெ. இபுலீசு படைப்போர். *1880*.

மீருன் சாகிப், முகம்மது. ஷைகு முஸ்தாபா வொலி பேரில் முனாஜாத்து.

Sinnathamby, J. R. Ceylon in Ptolemy's geography. Colombo, J. R. Sinnathamby, 1968.

Encyclopaedia Britannica Vol. 16. Chicago, Encyclo paedia Britannica Inc., 1970.

Hulugalle, H. A. J. Ceylon of the early travellers. 2nd ed. Colombo, Wesley Press. 1969.

Azeez, A. M. A. Some aspects of the Muslim society of Ceylon with special reference to the eighteen eighties. **In** Proceedings of the first International Conference Seminar of Tamil Studies. Vol. I. International Association of Tamil Research, 1968.

Ahmed, Nafis. The Arabs' knowledge of Ceylon. **In** Islamic culture, Vol. XIX, No. 3, July, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Neville, Hugh. Ancient emporium of Kalah in the empire of Zabedj. In Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society 1881-82 Vol. VII, No. 24. Colombo, Times of Ceylon Press, 1884.

Van Sanden, J. C. Sonahar. Colombo, 1925.

Queroz, Fernao De. The temporal and spiritual conquest of Ceylon. Colombo, Government Printer, 1930.

Tennent, James Emerson. Ceylon : An account of the Island. 5th ed. 2 vols. London, Longman, Green, Longman and Robets, 1860.

Pieris, P. E. Ceylon. The Portuguese era, being a history of the Island for the period 1505 - 1658. 2 vols. Colombo, Apothecaries, 1913, 1914.

Aziz, I. L. M. A criticism of the ethnology of the Moors of Ceylon. Colombo, Moors' Union, 1907.

Percival, Robert. An account of the Island of Ceylon. London, C and R. Baldwin, 1803.

Janaratana, Panditha, Panamgala. Thisara sandesa varnanawa. — K. H. A. Gnanapala, 1948.

Tennakone, R. Kokila Sandesaya. Colombo, Sri Lanka Prakasana Samagamaya, 1962.

Pannasara, Dehigaspe Rev. and Wimaladharma Palannoruwe. Rev. Gira sandesa varnana — J. D' Fernando, 1933.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களின் இலக்கிய முதிசம்

இலங்கை முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பை நாம் தெளிவதற்கு இந்நாட்டில் அவர்களுடைய வரலாற்றுப் பின்னணியை ஓரளவு அறிவது இன்றியமையாததாகும். எமது இலக்கிய வழிகாண முற்படும் இக்கட்டுரைக்குத் தொடர்பான சில தகவல்களை மட்டும் இங்கு கவனிப்போம்.

கிழக்காசிய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பு, கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே ஏற்பட்ட தொன்றாகும். அரேபிய தீபகற்பத்தின் ஏதுவான பூகோள அமைப்பின் காரணமாக இந்த வர்த்தகத்தில் அரேபியர்களே பெருமளவில் ஈடுபட்டிருந்தார்கள். இலங்கைத் தீவின் இரத்தினக் கற்களும், முத்துக்களும், யானைத் தந்தங்களும், வாசனைப் பொருள்களும் ஐரோப்பிய சந்தைகளில் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தன. எனவே, அரேபியர்கள் சரந்தீவு எனக் கண்ட இலங்கையின் மீது தமது நாட்டத்தைச் செலுத்தியதில் வியப்பில்லை.

முஸ்லிம் வர்த்தகக் குழு

"இலங்கையில் முஸ்லிம்களின் வர்த்தகக் குழுவொன்று ஏழாம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னரே குடியேறி விட்டது" ஆரம்ப காலத்தில் குடியேறிய முஸ்லிம்கள், அரேபியர்கள் என்று பொதுப்படையாகக் கூறப்பட்டபோதிலும் அவர்கள் "இஸ்லாத்தில் இணைந்த அரபு மொழி பேசும் பாரசீகர்களையும், அரேபியர்களையும், அபிசீனியர்களையும் உள்ளடக்கிய தொரு கூட்டத்தினராவர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரேபியர்களின் ஆரம்ப கால வர்த்தகத் தொடர்பு இலங்கையோடு நேரடியாக ஏற்படவில்லையென்பது கவனிக்கத்தக்கதாகும். இத்தீவுப் பண்டங்கள் 'மலபார்' கரையோரச் சந்தைகளிலே கிடைக்கக் கூடியதாகவிருந்ததே இந்நிலைக்குக் காரணமாகும். பின்னர், ''பத்தாம் நூற்றாண்டளவில் இலங்கையோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு குடியேறிய அரேபியர்கள், தென்னிந்தியத் துறைமுகங்களில் ஏற்கனவே வளமான வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் பிரதிநிதிகளேயாவர்.''

இதுதவிர, இலங்கையின் இயற்கை எழிலினாலும் பாவா ஆதம் மலையோடு இணைந்த புராதனப் பெரு மரபினாலும் பெருந்தொகையான அரேபியர்கள் இவண் ஈர்க்கப்பட்டனர். இவர்களுட் சிலரும் இந்நாட்டில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

வர்த்தகர்களாகவும், தேசாந்திரிகளாகவும் இந்நாட்டை வந்தடைந்த அரேபியர்களுக்கும் இந்நாட்டு அரசர்களுக்குமிடையில் தொன்றுதொட்டு நல்லுறவே நிலவி வந்துள்ளது. ''மிகுந்த ஆற்றலும், முயற்சியும் கடலோடுந் திறனும் வாய்ந்த அரேபியர்கள் இந்நாட்டில் தமது சமயத்தைப் பேணிப் பரப்பிய முறை அவர்கள் வேறு நாடுகளில் கடைப்பிடித்த கொள்கைகளிலிருந்து மிகவும் மாறுபட்டிருந்தது என்ற உண்மை பலருக்கு வியப்பளிக்கக்கூடும். ஐரோப்பியர்கள் இந்நாட்டில் அடியெடுத்து வைப்பதற்கு முன் அரேபியர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்குமிடையில் ஏற்பட்ட அசம்பாவிதமான சம்பவம் ஒன்றையேனும்கூட இந்நாட்டு வரலாற்று இலக்கியங்களில் நாம் காண முடியாது.''

குடியேற்றத்திற்கு ஊக்கம்

காலப்போக்கில் பெருகிவந்த அரேபியர்களின் தொடர்பினால் தமக்கேற்பட்டு வந்த நன்மைகளை நன்குணர்ந்த சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களின் குடியேற்றத்திற்கு மேன்மேலும் ஊக்கமளித்து வந்தனர். பிற்காலத்தில் போர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீசியர் ஒல்லாந்தர் முதலியோரால் கரையோரப் பகுதிகளி லிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கபட்ட பொழுது மலை நாட்டில் அவர்களுக்குச் சிங்கள மன்னர்கள் தஞ்சமளித்த தோடு சேம வாழ்விற்குத் தக்க வசதிகளையும் அளித்தனர்.

இதே வேளையில் மலபார் கரைப்பகுதியும் 'மாபார்' என்று அரேபியர்களால் அழைக்கப்பட்ட தென்முனையும் சமய ஒருமைப்பாட்டின் மீதெழுந்த பலம் வாய்ந்த முஸ்லிம் பிரதேசங்களாகப் பரிணமித்து வந்தன.

இவ்வாறாகத் தென்நாட்டிலும், இலங்கையிலும் நிலை பெற்ற முஸ்லிம்கள் தமது சமய, கலாசாரத்துறைகளில் தமக்குள்ளும், ஏனைய முஸ்லிம் நாடுகளுடனும் தொடர்பு கொண்டவர்களாயிருந்து வந்தனர். இலங்கையில் குடியே றிய ஆரம்பகால முஸ்லிம்கள் "பாரசீகக் குடாக்கடல், பஸ்ரா ஆகியவற்றினூடாகப் பக்தாத் உடனும் ஏனைய கிலாபத் நாடுகளுடனும், அரேபியக் குடாக் கடல் எகிப்து ஆகியவற்றினூடாக மத்திய தரைக் கடலோரமாகவுள்ள முஸ்லிம் அரசுகளோடும், கொண்டிருந்த தொடர்பின் மூலம் அவர்கள் இந்த நாடுகளிலிருந்து முஸ்லிம் சட்டம் பற்றிப் பல மூல அரபுக் கிரந்தங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத் தினர்கள். மற்றும் மருத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளிலான மிகவும் பெறுமதி வாய்ந்த கிரேக்க உரோம பார கிரந்தங்களின் அரபு மொழி பெயர்ப்புக்களை யும் அவர்கள் இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினர்கள்."

இஸ்லாமியச் சட்டங்கள்

இலங்கையில் முஸ்லிம் கிராமந்தோறும் இஸ்லாமியச் சட்டங்கள் பரவுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் உலமாக் களேயாவர். "இவ்வுலமாக்களில் அரேபியா, எகிப்து, இந் தியா ஆகிய நாடுகளில் அறிவுத்தேட்டத்திலும் பிரயாணத் திலும் பல ஆண்டுகளைக் கழித்தோர் பலரிருந்தனர். இவர் கள் மூலமாகவே இந்த நாடுகளில் நிலவிய முஸ்லிம் சட்டங் கள் பற்றிய முக்கிய கிரந்தங்கள் இங்கு பரவலாயின"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மகா சமுத்திரத்தில் 11ம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட வர்த்தகப் பெருக்கம் மலபார் கரையோரத்தில் முஸ்லிம்களின் ஆதிக்கம் தொடர்வதற்கு ஏதுவாயிருந்தது. ''எனவே இலங்கை முஸ்லிம்கள் தமது முஸ்லிம் உலகினோடான தொடர்பிற்குப் பெரும்பாலும் மலபார் பிரதேசத்தையே நுழைவாயிலாகக் கொள்ளத் தலைப்பட்டனர். அக்காலத்தே இப்பிரதேசத்தில் ஏனைய சமூகங்களிலிருந்து சமூக, கலாசார அடிப்படையில் மாறுபட்ட அரேபிய முஸ்லிம்களும், இஸ்லாத்தில் இணைந்து கொண்ட இந்திய முஸ்லிம்களும் வாழ்ந்து வந்தனர். வர்த்தகத் துறையிலும், கலாசாரத் துறையிலும் இந்த முஸ்லிம்களோடு ஏற்பட்ட நெருங்கிய தொடர்பு, இலங்கை முஸ்லிம் சமூகத்தில் புதியதொரு சாராரை-அதாவது இந்திய முஸ்லிம்களை இணைத்துக் கொண்டது. இதன் காரணமாக இலங்கை முஸ்லிம் சமூகத்தில் முன்னர் நிலவிய பிரத்தியேகமான அறபுத்தன்மை பாதிக்கப்பட்டது.''

அடுத்து, பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பக்தாத் வீழ்ச்சியடைந்ததும் இந்து மகா சமுத்திரத்தில் அரேபியரின் வர்த்தக ஆதிக்கமும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை முஸ்லிம்கள் படிப்படியாகத் தமது கலாசாரத் தேவைகளுக்கு இந்தியாவையே நாடலாயினர். இவ்வேளையில் இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் முஸ்லிம்களின் ஆதிக்கம் நிலைபெற்றிருந்தது. எனவே, பதினைந்தாம் நூற்றாண்டளவில் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் தென்னகத்தின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

அரேபிய நாடுகளுக்கும் தென்னகத் துறைகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புக்கும், தென்னகச் செல்வாக்கு ஈழத்தினையும் எட்டி, இவ்விரு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்திய தொடர்புக்கும் உதாரணமாக நாம் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீதக்காதி மரைக்காயரின் வளமான வர்த்தக முயற்சிகளை இங்கு குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதக்காதி மரக்கலங்கள்

"சீதக்காதியின் மரக்கலங்கள் இந்துமாக் கடலைக் கடந்து செங்கடலுள் நுழைந்து, அரேபியா, எகிப்து போன்ற நாடுகளுக்குச் செல்லும்...மலாயாவிலும் இலங்கையிலும் செங்கடல் துறைமுகங்களிலும் சீதக்காதி மரைக்காயர் பல வர்த்தகக் காரியாலயங்களை நிறுவினர்...மரைக்காயரின் வேறு சில மரக்கலங்கள் கீழக்கரையிலிருந்து புறப்பட்டுத் தொண்டி, பாசிப் பட்டினம் முதலிய துறைகளைக் கடந்து இலங்கை செல்லும். வட கிழக்குப் பருவக் காற்று வீசுகின்ற காலத்து கடல்படு பொருள்களான முத்து, பவளம் முதலிய மணிகளையும், மலைபடு பொருள்களான, மிளகு, இலவங்கம், ஏலம், இஞ்சி, சந்தனம், தேக்கு முதலியவைகளையும் நிரப்பிக் கொண்டு அரேபியாவை அடையும்."

இதுவரை நாம் கூறியவற்றிலிருந்து தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய இஸ்லாமிய சமய, கலாசார உறவுகளையும் தமிழ், அறபு, அறபுத் தமிழ் ஆகிய மொழிகளில் இரு நாட்டு முஸ்லிம்களுக்கும் இடையிலான இலக்கிய உறவின் பின்னணியையும் கிரகிக்கக் கூடியதாக உள்ளது. இனி, இந்த அடிப்படையின் மீது இலங்கை முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பையும் அவ்வழியே அவர்களின் தனித்துவத்தையும் கவனிப்போம்.

இலங்கையில் முதன் முதலாக அச்சு இயந்திரம், கவர்னர் வேன் இம்ஹொஃப் அவர்களுடைய காலத்திலேயே நிறுவப்பட்டது. 1737-ல் வெளியிடப்பட்ட சிங்கள தியான நூலே இலங்கையில் அச்சிடப்பட்ட முதலாவது நூலாகும். இதன் பின்னர், "புதிய ஏற்பாடு" என்னும் விவிலிய வேதம் 1749-ல் தமிழில் அச்சிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 1816ல் வந்துசேர்ந்த அமெரிக்க மிஷனரிமாரும் அச்சு இயந்திரம் நிறுவித் தமது சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை அவர்களுக்கு அச்சக வசதிகள்இருந்ததாகத் தெரியவில்லை. 1869ம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அலாமாத்—லங்காபுரி' என்ற மலாய் முஸ்லிம் பத்திரிகை ஒன்றை, அறபு லிபியில் துவான் பாபா யூநூஸ் ஆரம்பித்து நடத்தியுள்ளார். எனக்குக் கிட்டியுள்ள இலங்கையில் அச்சேறிய இஸ்லாமிய இலக்கிய நூல்களுள் மிகப் பழமையானது 1879ம் ஆண்டில் வெளியான 'பயகாம்பர் அவதார பலவர்ணச் சிந்து' எனும் நூலாகும் இந்நூல், முத்துப் பேட்டை அலியார் ராவுத்தர் குமாரர் ஷெய்கு அப்துல் காதிறு மதுர கவிப் புலவர் அவர்களால் செய்யப்பட்டது. இது கொழும்பு பழைய சோனகத் தெரு அலியா மரைக்காயர் அவர்கள் குமாரர் குழந்த மரைக்காயர் அவர்களின் புதிஞலங்காரி அச்சுக்கூடத்தில் 1879ம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் வெளியிடப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அதாவது 1885ம் ஆண்டில்தான் இலங்கையில் வெளியாகும் நூல்களின் பதிவு முறை ஆரம்பிக்கப்பட்டது. எனவே இக் கட்டுரையில் பெரும்பாலும் 1885ம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட நூல்கள் பற்றியே குறிப்பிடப்படும்.

இஸ்லாமிய இலக்கிய மரபு

இலங்கையில் இஸ்லாமிய இலக்கிய மரபு பற்றி ஆயும் பொழுது, இத்துறையில் இஸ்லாமிய சமய. அறிவுப் போதனை பீடங்களான மத்ரஸாக்களும், மக்தப்களும் அமைத்துக் கொடுத்துள்ள அடித்தளத்தினை நாம் மறந்துவிட முடியாது இஸ்லாமிய இலக்கிய வளத்தை விளக்க முற்படும் நாம், எமது பள்ளிவாயில்களிலே தொன்று தொட்டு நிகழ்த்தப் பட்டு வரும் குத்பாப் பிரசங்கங்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. மற்றும், ஓயாது நிகழ்ந்துவரும் ஹதீஸ் விரிவுரைகளை எண்ணுவதில்லை. அதேபோல் நாடோடிகளாக இன்னிசை பரப்பி வரும் எமது பக்கீர்மார்களின் பைத்துக்களையும் அண்ணாவிமார், உஸ்தாதுமார் உதடுகளிலே தவழ்ந்து வந்த களிகம்புப் பாடல்களையும் கல்யாணக் களரிகளிலும், கந்தூரிக் களரிகளிலும் கூடுவோரைக் களிப்பூட்டும் பல வகைப் பதங்களையும் நாம் போதியளவு கவனத்திற் கொள்வதில்லை. மேலும், மட்டக்களப்புப் போடியாரின் பெருவயலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழும் கிராமியப் பாட்டொலியும் மன்னூர்ப் புலவர்களின் மாரூத சீருப் புராண முஹறீன் புராணப் பாராயணப் பேரொலியும் முஸ்லிம் இலக்கிய ஆய்வாளர்களின் சிந்தனையை ஈர்ப்பதில்லை. இவ்வகையான இலக்கிய வடிவங்களும், போக்குக்களுமே எமது இஸ்லாமிய இலக்கிய நிர்மாணத்திற்கான அத்திவாரத்தை அமைத்துக் கொடுத்துள்ளன. இதே மரபே எமது சமகால, வருங்கால இலக்கியத்தையும் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

இனி, இலங்கை முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகளையும், அவற்றோடு தொடர்பான வகையில் இந்நாட்டிற்கும் தமிழகத்திற்கும், இடையிலான இலக்கியத் தொடர்பையும் காண்போம்.

பொதுவாக, ஈழத்துத் தமிழ் வளர்ச்சியில் யாழ்ப்பாணக் குடாநாடே முன்னணியில் இயங்கி வந்துள்ளது. நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமானே தமிழினதும் சைவத்தினதும் மறுமலர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்து அரும் பணி ஆற்றியவர் என யாவராலும் ஏற்கப்பட்டுப் போற்றப்படுகின்றார். இலங்கை, தமிழகம் ஆகிய நாடுகளுக்கிடையிலான இலக்கியப் பேருறவிற்கு நாவலர் பணியே சிறந்த சான்றாகும். நாவலர் பெருமான் சிதம்பரத்திலே நிறுவிய சைவப் பிரகாச வித்தியாசாலையும், சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சகங்கள் நிறுவி நூற்பதிப்பில் கண்ட சாதனைகளும் இவ்வகையில் சிறப்பித்துக் கூறப்பட வேண்டியனவாகும். இந்த அடிப்படையில், எனினும் காலத்தால் முற்பட்ட வகையில் ஈழத்து முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகளும் நிகழ்ந்துள்ளன. இம்முயற்சிகளுக்கும் யாழ்ப்பாணமே முன்னோடியாகத் திகழ்ந்துள்ளதால், இப்பிரதேசம் பற்றியே முதலில் கவனிப்போம்.

முதலாவது சீரு நூல்

இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் உமறுப் புலவரின் சீருப் புராணம் முதன்மையான தானத்தை வகித்து வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பார்வைக்குக் கிட்டியுள்ள முதன் முதலில் அச்சேறியுள்ள சீறா நூல் எனக் கருதப்படும் ''சீறுவென்கின்ற புராணம்'' இலங்கை முஸ்லிம்களின் தமிழகத்துடனான தமிழ் இலக்கிய ஒத்துழைப்பின் ஆரம்ப காலத்தைச் சுட்டுவதாக உள்ளது. சீறாவின் இப்பதிப்பு ஹிஜ்ரி 1258க்குச் சரியான கி. பி. 1842ம் ஆண்டில் சென்னையில் வித்தியா விலாச அச்சுக் கூடத்தில் அச்சேறியுள்ளது. இந்நூலை அச்சிற் பதிப்பித்தலுக்குக் காயல்பட்டினத்து ஷெய்கு அப்துல் காதிர்லெப்பை ஆலிம் புலவர், உவைசு நெய்னா லெப்பை ஆகியோரோடு காரியம் யாழ்ப்பாணம் பரிகாரி மரைக்காயர் பக்கீர் முஹியித்தீன் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

''பக்கீர் முஹியித்தீன்...இன்பத் தமிழ் இலக்கியங்களையும் பழுதறக் கற்றுத்தேர்ந்த பெருந்தகையாவர். இவர், யாழ்ப்பாணத்துப் பரிகாரி மரைக்காயர் எனும் உதுமான் லெப்பையவர்களின் புதல்வராவர். இவர், இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுடையவராய் வாழ்ந்தார். இஸ்லாமிய இலக்கிய ஏட்டுப் பிரதிகளைத் தேடி அவற்றைப் பரிசோதித்து முதன் முதலில் வெளியிட்ட பெருமை பக்கீர் முஹியித்தின் புலவரையே சாரும். காசிம் புலவரின் திருப் புகழ் (ஹி 1269 — கி. பி. 1852 — சிந்தாதிரிப் பேட்டை பிரபாகர அச்சுக்கூடம்) ஷெய்கு அப்துல் காதிறு நெய்னார் லெப்பை ஆலிம் புலவர் அவர்களின் குத்பு நாயகம் எனும் முஹியித்தீன் புராணம் (ஹி 1271 — கி. பி. 1854 சென்னை முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்), பனி அஹமது மரைக்காரின் சின்ன சீறா (ஹி 1271 — கி. பி. 1854 சென்னை முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்) என்பவற்றை முதலில் அச்சு வாகன மேற்றிய பெருமை பக்கீர் முஹியித்தீன் புலவரையே சாரும்.''

பக்கீர் முஹியித்தீன் புலவரின் நூற்பதிப்பு முயற்சிகளையும் இத்துறையில் அவரது முதன் முயற்சியாக இருக்கலாம் என்று ஊகிக்கக்கூடிய சீறாப் புராணப் பதிப்புத் திகதியையும் (ஹி 1258 — கி. பி. 1842) கவனிக்கும் பொழுது, இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் நூற் பதிப்புத் துறையில் சி.வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுகநாவலர், கலாநிதி உ. வே. சாமிநாதர் ஐயர் முதலியோருக்கு முற்பட்டவர் என்பது தெளிவாகின்றது.

கவிஞர்கள் கௌரவம்

கவிஞர்களைக் கௌரவப்படுத்தும் மரபும் யாழ்ப்பாணத்து முஸ்லிம்களிடையே சிறப்பாகப் பேணப்பட்டு வந்தமைக்குப் பல உதாரணங்கள் உள. நாகூர் தர்கா வித்துவான் குலாம் காதிறு நாவலர் அவர்களின் ஆரிபு நாயகம் என்ற நூல் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்பட்டது. இதனைப் பாடுவதற்குப் பொருளுதவி செய்தவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரே ஆவார். அவர் பாக்கியப்பா என்று வழங்கும் முஹம்மது லெப்பை மரைக்காயர் ஆவார். இந்நூலின் அரங்கேற்றத்தையொட்டி யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள், புலவர் ''ஸுலைமான் லெப்பையின் தலைமையில் பாராட்டு விழா நடத்தி, அவருக்குப் பரிசில் பல நல்கி அவரைப் பெருமைப்படுத்தினர்''.

இலங்கை முஸ்லிம் புலவர்களுள் மிகவும் கூடுதலான பாடல்களை எழுதிப் புகழ்பெற்ற கண்டி தர்கா வித்துவான் அருள் வாக்கி அப்துல் காதிர் அவர்களுக்கு யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் அசனா லெப்பை புலவர் அவர்களின் தலைமையின் கிழ் நடத்திய பாராட்டு விழாவிலே 'வித்துவ தீபம்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததும் சிறப்பு மிக்க தொரு நிகழ்ச்சியாகும்.

சிந்தாதிரிப் பேட்டை நாராயணசாமி முதலியாருடைய பிரபாகர் அச்சுக்கூடத்தில் 1873ல் அச்சேறிய, 'செய்தக்காதி நொண்டி நாடகம்' யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அலாவுதீன் சாய்பு அவர்களின் முயற்சியால் வெளியானதாகும். மற்றும், சிறப்புமிக்க முஸ்லிம் தமிழ்க் காப்பியமான முஹியித்தீன் புராணத்தின் வெளியீட்டுக்கு உதவியவர் யாழ்ப்பாணம் உசைன் நெய்னார் புதல்வர் ஷெய்கு மீரான் அவர்களாவர். இந்நூலைச் சென்னையில் தோன்றி, யாழ்ப்பாணத்தில் வாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பதுறுத்தின் புலவர் நாலாயிரம் கவிதைகளில் ஆக்கி யுள்ளார்.

இத்தகு முயற்சிகளுக்கு நேராக யாழ்ப்பாணத்துச் சாமுனு லெப்பையவர்கள் குமாரரும், காலி மாநகரில் வாசம் செய்தவருமாகிய ஷெய்குத் தம்பிப் புலவர், இயற்றிய சீரு நாடகம் என்று வழங்கும் காரணமாலையை 1878ம் ஆண்டில் சென்னையில் அச்சேற்றுவதற்குத் தஞ்சாவூர் செய்கு அப்துல் காதிர் அவர்கள் உதவியுள்ளார்கள்.

புகழார்ந்த புலவர்கள்

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத்து முஸ்லிம் இலக்கிய அரங்கிலே புகழார்ந்த புலவர்களாகத் திகழ்ந்தவர்கள் அசனு லெப்பை அவர்களும், சுலைமான் லெப்பை அவர்களும் ஆவர். இவர்களை இலக்கிய இரட்டையர் என்றே கூறலாம். "அசனு லெப்பை ஆலிம் சாஹிபு அவர்களின் அற்புத குணத்தையும், அறிவின் ஆழத்தையும் இங்கு ஒரு சிறிது குறிப்பிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர் ஆங்கிலம் படித்து, உப்புக் கந்தோரில் உயர்ந்த உத்தியோகம் ஓம்பியதோடு, தமிழிலும் மிகவும் ஆழிய கருத்துள்ள அற்புத முனாஜாத்துக்களும், குலாம் காதிறு நாவலர் போன்ற மகா வித்துவான்களுடைய நூல்களுக்குப் பாயிரம் முதலியவைகளும் பாடியவர்."

இத்தகைய மேதாவிலாசம் பொருந்திய அசனு லெப்பை அவர்கள் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி முன்னைநாள் அதிபரும், முதிர்ந்த தமிழறிஞருமான மர்ஹூம் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் பெரிய தகப்பனுராவர்.

இவ்வாறாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே, முஸ்லிம்கள் இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குப் பல மட்டங்களில் நின்று பணியாற்றி நாம் பெருமை கொள்ளத்தக்கதொரு மரபினை ஏற்படுத்தியுள்ளார்கள். நூல்களைப் படைத்தல், அவற்றைப் பரிசோதித்துப் பதிப்பித்தல், வெளியீட்டிற்கான பொருளுதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல், புலவோரைப் போற்றிக் கௌரவித்தல் முதலிய வகைகளிலெல்லாம் அவர்களது முன்னோடியான முயற்சிகள் மேலும் விரிவாக ஆராயப்படத் தக்கனவாகும்.

மலை நாட்டில் தஞ்சம்

அடுத்து, ஈழத்தின் மார்பகம் எனும் மலை நாட்டின் இஸ்லாமிய இலக்கிய மரபினைச் சற்றுக் கவனிப்போம். பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, ஐரோப்பியருடைய வருகையோடு தென்மேற்குக் கரை நெடுகிலும் மிகுந்த செல்வாக்கோடு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களின் நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதாயிற்று. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் பலவிதமான இன்னல்களுக்கு ஆளான முஸ்லிம்கள், மலைப் பிரதேசத்தில் தஞ்சம் புகலாயினர். இவ்வாறு மலையகம் புகுந்த முஸ்லிம்களுக்குச் சிங்கள மன்னர்களின் ஆதரவு கிட்டியது. எனவே அக்குறணை, மாவனெல்லை, உடுநுவரை, ஹெம்மாத்தகம, கலகெதர போன்ற குறிஞ்சிக் கிராமங்களில் அவர்கள் குடியேறித் தமது தனித்துவம் பேணி வந்தார்கள்.

இக்குடியேற்றங்களில் திருக்குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றின் வழி வந்த ஷரீஅத் சட்டங்களே மக்களின் சமூக வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்தன. இதே அடித்தளத்தின் மீதெழுந்த இலக்கியப் பாரம்பரியமே மலை நாட்டில் இது காறும் நீடித்து வரும் இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது.

மலை நாட்டின் இராசதானியாக விளங்கிய கண்டியில் அடங்கியுள்ள ஷெய்கு ஷிஹாபுத்தீன் (வலி) அவர்களின் தர்கா, ஓர் இஸ்லாமிய இலக்கியப் பீடமாகக் கணிக்கக் கூடியதாகும். இத்தர்காவின் நாயகரான பெரியார், பல சிறந்த கவிதைக் கோவைகளுக்குத் தலைவராக விளங்கியுள்ளார். மேலும் இப்பெரியார், ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் ஓர் ஆத்மிகப் பாலமாகவும் திகழ்கிறார்கள். நாகூரின் நாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரான மகான் மீரான் ஸாஹிப் (வலி) அவர்களின் சீடர்களுள் ஷெய்கு ஷிஹாபுத்தீன் அவர்களும் ஒருவரெனக் கூறப்படுகின்றது.

நாகூர் ஆண்டவர்கள் தமது சிஷ்யர்கள் நால்வருடன், இலங்கையில் மார்க்கப் பிரசாரத்திற்காகவும், பாவா ஆதம் மலை, தப்தர் ஜெய்லானி ஆகிய புனிதத்தலங்களைத் தரிசிப்பதற்குமாக இலங்கை வந்தார்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் தங்களது யாத்திரை முடிவுற்றதும் மத்திய மாகாணத்தில் ஹஸரத் ஷெய்கு செய்யிது ஷிஹாபுத்தீன் (வலி) அவர்களை மார்க்கப் பிரசாரம் செய்யுமாறு பணித்துவிட்டு இந்தியா சென்று விட்டார்கள்.

அருள் வாக்கி அப்துல்காதிர்

செய்யித் ஷிஹாபுத்தின் (வலி) அவர்களுடைய தர்கா வித்துவானாகத் திகழ்ந்த அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் (1866 — 1918) அவர்கள், ஈழத்தின் தலை சிறந்த புலவர்களுள் ஒருவராவர். இவர்கள் கண்டியை அடுத்த போபிட்டிய கிராமத்தில் வாழ்ந்தவர். இக்கவிஞர் ஷெய்கு ஷிஹாபுத்தீன் (வலி) அவர்கள் பேரில் பதிகம், கண்டிக் கலம்பகம், அருண் மணிமாலை, பதிற்றுப்பத் தந்தாதி முதலிய கவிதைகளை இயற்றியுள்ளார். இவர் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கவிதை நூல்களை ஆக்கியதோடு "தன்பீஹுல் முரீதின்" எனும் அறபுத் தமிழ் நூலையும் தமிழில் வசனமாக எழுதியுள்ளார். அருள்வாக்கி அப்துல் காதிரின் பாடல்கள் இலங்கையிலும் தமிழகத்திலுமாக இயற்றப்பட்டனவாகும். இரு நாட்டவரும் உரிமை கொண்டாடும் தகைமை பெற்றவர் இப்புலவர். இவரது பெரும்பாலான நூல்கள் அச்சேறவில்லை.

இன்று இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகப் போற்றப்படும் அறிஞர் சித்தி லெவ்வை (1838– 1898) அவர்களின் இலக்கியப்பணி, இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய தொன்றாகும். அவர்களுடைய இலக்கியப்பணி, பன்முகப் பட்டதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியப் பெருமைக்குப் புது மெருகூட்டி அவர்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் சித்தி லெவ்வை.

முஸ்லிம் நேசன் (1882–1889) ஞானதீபம் (1892) ஆகிய சஞ்சிகைகளின் மூலம் சித்தி லெவ்வை தமது மக்களிடையே சமய, கல்வி, கலாசார, அரசியல் துறைகளில் பெரும் விழிப்புணர்ச்சியை ஊட்டியதோடு, சிறப்பாகக் கல்வித்துறையில் தமது எண்ணங்களுக்குச் செயலுருவும் தந்தார். இவரது நன் முயற்சியே இன்று இலங்கை முஸ்லிம்களின் புகழார்ந்த கல்விப்பீடமாகிய கொழும்பு ஸாஹிறுக் கல்லூரியின் தோற்றத்திற்கு வழிகோலியது.

சித்திலெவ்வையின் சேவை

அறிஞர் சித்திலெவ்வை மிகுந்த முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டவராயிருந்தார். அவருடைய சிந்தனை தமிழகத்தின் மீது மாத்திரமன்றி வட இந்தியாவில் ஏற்பட்டு வந்த முஸ்லிம்களது எழுச்சியின் மீதும், மத்தியகிழக்கு முஸ்லிம் நாடுகளின் சுயாதீன வேட்கையின் மீதும் கூடப் படர்ந்திருந்தது. அவருடைய இலக்கிய ஆக்கங்களும் இதே விரிவான வகையில்தான் அமைந்தன. உதாரணமாக, அஸன் பேயின் கதை பல நாடுகளை இணைத்து நிற்கின்றது.

அறிஞர் சித்திலெவ்வை இந்நாட்டின் முஸ்லிம் பத்திரிகைத்துறையின் முன்னோடியாகும். ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், ஏ. டி. ஸம்ஸுத்தீன், எல். எம். உதுமான் முதலான பத்திரிகாசிரியர் பரம்பரையொன்றை உருவாக்கிவிட்ட பெருமை இவரைச்சாரும்.

தமிழகத்திலும் கூட சித்தி லெவ்வையின் முஸ்லிம் நேசனுக்கு பின்னரே முஸ்லிம் பத்திரிகைகள் தோன்றலாயின. ''முதன் முதலில் முஸ்லிம் பத்திரிகையைத் தோற்றுவித்த பெருமை இலங்கையையே சாரும். சோனகரிடையே தோன்றிய மாபெரும் அறிஞரும், சிறந்த சமூக அபிமானியுமான சித்திலெவ்வை மரைக்காயர், 1892ல் முஸ்லிம் நேசனை ஆரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தார். பின்னர், இவரே ஞானதீபம் என்பதையும் வெளி யாக்கினார். இதன்பின் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டின் பத்திரிகைகள் மலரலாயின. 1906-7ல் ஹாஜி ஜீலானிப் பக்கீர் ஆலிம் சென்னையிலிருந்து "லிவாவுல் இஸ்லாம்' பத்திரிகையை வெளியிட்டார்" என்று ஆர். பி. எம். கனி அவர்கள் இஸ்லாமிய இலக்கியக் கருவூலத்தில் குறிப் பிடுகிறார்கள். அறிஞர் கனி அவர்கள் முஸ்லிம் நேசன் 1892ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதென்று கூறுவது 1882 என்றிருக்க வேண்டும். இதன்படிக்கு, 1882ம் ஆண்டில் தோன்றிய முஸ் லிம் நேசனுக்கு 23 ஆண்டுகளுக்குப் பின்னரே தமிழகத்தில் முஸ்லிம் பத்திரிகைகள் தோன்றலாயின.

சித்திலெவ்வை எழுதிய அசன்பேயினுடைய கதை (1885) இலங்கையின் முதலாவது தமிழ் நாவலாகும். தமிழ் நாவல் இலக்கியத் துறையில் முதலாவதாகத் தோன்றியதெனக் கணிக்கப்படும் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரத்துக்கு (1879) அடுத்ததாக உள்ளது, அஸன் பேயின் கதை. இதனை அடியொட்டி ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்கள் அலதின் பேயின் கதையை எழுதியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சித்திலெவ்வை எழுதிய "அஸ்ரா ருல் ஆலம்" எனும் தத்துவ நூல் பெரும் வாதப் பிரதிவா தங்களுக்கு உட்பட்ட தொன்றாகும். இந்நூலை ஆர். பீ. எம். கனி அவர்கள் "மெய்ஞ்ஞானப் பேரமுதம்" என்ற பெயரில் விளக்கத்தோடு வெளியிட்டுள்ளார்கள். சித்திலெவ்வை அவர்கள், மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகளைத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொண்டிருந்தார்.

மொழிபெயர்ப்புத் துறை

சித்திலெவ்வை அவர்கள் டபிள்யூ. ஜீ. எம். றெனல்ட்ஸ் அவர்களின் ஓமர் என்ற ஆங்கில நாவலை 'கிரேக்க- துருக்கிய யுத்த சரித்திரம்' என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். இலங்கையில் மொழிபெயர்ப்புத் துறையில் இது ஒரு முன்னோடி முயற்சியென்றே கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் சித்திலெவ்வைக்குப் பக்கபலமாக விளங்கி வந்த ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் அவர்களும் இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறையில் சிறப்பிடம் வகிக்கின்றார். இவர் ஆங்கிலத்திலும் புலமைமிக்கவர். முஸ்லிம் பாதுகாவலன் என்ற பத்திரிகையின் ஆசிரியராக இவர், சித்திலெவ்வையின் சமூக முன்னேற்ற எழுத்துப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தார்.

கண்டிக்கு அண்மையிலுள்ள அக்குறணையில் கசாவத்தையைச் சேர்ந்த முஹம்மது லெப்பை ஆலிம் ஸாஹிப் அவர்கள் இஸ்லாமிய இலக்கியத்துறையில் சிறந்த பணிகள் ஆற்றியுள்ளமை இதுகாறும் மறக்கப்பட்டதொரு செய்தியாகும். இப்பெரியார் அறபு மொழியில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராவர். அறபு மொழியிலும் அறபுத் தமிழிலும் அவர்கள் பல நூல்களை ஆக்கியுள்ளார்கள். பல குத்பாப் பிரசங்கங்களையும் எழுதியுள்ளார்கள். இப்பிரசங்கங்கள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. கசாவத்தை ஆலிம் என்று அழைக்கப்பட்ட இப்பெரியார், சித்திலெவ்வை அவர்களின் சமகாலத்தவராவர். சித்திலெவ்வை அவர்களுக்கு ஆத்மிக வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

கசாவத்தை ஆலிம் அவர்களின் ஆக்கங்களுள், பின்வருவன குறிப்பிடத்தக்கன: பத்ஹுல் மிஸ்ர் பஹனஸா எனும் வசன காவியம், தீன் மாலை, தைக்கா சாஹிபு பேரில் பைத்து, பாசிப்பட்டினம் நெய்னா முஹம்மது அவர்கள் பேரில் பைத்து, காஹிரி ஷெய்கு அப்துல் பரீத் அவர்கள் பேரில் பைத்து, அளுத்காமம் ஹஸன் (வலி) அவர்கள் பேரில் பைத்து, வலிகாமத்தில் பிறந்து காத்தான்குடியில் அடங்கியிருக்கும் அப்துல் காதர் மௌலானா பேரில் மௌலூது, முஹியித்தீன் அப்துல் காதர் ஜீலானி பேரில் வித்ரியா.

கசாவத்தை அறிஞர் ஆலிம்

பத்ஹுல் மிஸ்ர் எனும் அறபுத் தமிழ் கிரந்தம் ஹிஜ்ரி 1324ம் ஆண்டில் சென்னையில் இட்டா பார்த்தசாரதி நாயுடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் தமிழில் வெளியிடப்பட்டது. இந்நூல் ஏற்கனவே 1894ம் ஆண்டில் கண்ணகுமது மக்தூம் முஹம்மது அவர்களால் சென்னையில் பதிக்கப்பட்டுள்ளது. இந்நூலை அச்சிட்ட வரலாற்றில் ஆசிரியரைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "வருத்தக மிகுந்து வளஞ்சுரந்தோங்கும் இலங்கையிற் சிறந்த வெழிலுறு கண்டியாம் நலங்கொளூரடுத்த நற் கசாவத்தையென்னுஞ் சிற்றூரிலிருந்து வாழறிஞர் பன்னரும் புகழின் பகுத்தறிவுடையார்- நல்லறிவையும் நழுவிலாச் சிந்தையர் கல்வியிற் சிறந்த முகம்மது லப்பை ஆலிம் சாகிபென் றப்பெயர் பெற்றோர்"

அறிஞர் சித்திலெவ்வை அவர்களும் கசாவத்தை ஆலிம் அவர்களைப் பற்றி "அவர்கள் லாஹிருடைய இல்மில் மிகவும் தேர்ச்சியுடையவர்கள். இலங்கையில் எந்தக் கோட்டுத் தலங்களிலும் வழக்குகள் உண்டானாலும் அவர்கள் பத்வாவையே ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். அரபிலொரு புலவர் அவர்கள் காயல்பட்டினத்தில் பத்துவருடம் வரையும் ஓதி முடிந்தபின் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பேரில் கோவை செய்த மவ்லிதை அக்காலத்திலிருந்த தைக்கா ஸாஹிப் முதலிய பெரியோர்கள் மிகவும் புகழ்ந்து அவர்கள் பைத்துக்கள் சதக்கத்துல்லா அப்பா அவர்களுடைய பைத்துக்களுக்குச் சரியாயிருக்கின்றனவென்று புகழப்பட்டவர்கள்" என்று எழுதியுள்ளார்கள்.

அக்குறணையில் குருகொடையைச் சேர்ந்த கவிஞர் டி. எம். ஷாஹுல் ஹமீது நாவலப்பிட்டியைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் புலவர், கலகெதர நூர் முஹம்மது புலவர், மாத்தளை ஷெய்கு சுலைமானுல் காதிரி, போன்றோருடைய இலக்கிய ஆக்கங்கள் சிங்களம் பெருமளவில் வழங்கும் பிரதேசங்களிலும் இஸ்லாமிய இலக்கிய மரபு பேணப்பட்டு வந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

இலங்கையில் முஸ்லிம்கள் பெருக வாழும் பிரதேசம் கிழக்கு மாகாணமாகும். முஸ்லிம் ஆண்களும், பெண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக இசைக்கும் கிராமியக் கவிதைகளுக்குப் பிரசித்தமானது இப்பிரதேசம். கிழக்கு மாகாண இஸ்லாமிய இலக்கிய மரபு இயற்கையோடியைந்த தொன்றுகும். இப்பிரதேச மக்களின் வாழ்க்கையோடியைந்த கிராமியக் கவிதைகளின் வழி வந்தவையே பெரும்பாலான இஸ்லாமிய இலக்கிய ஆக்கங்கள். புயற்காவியம், வெள்ளக் காவியம், மழைக்காவியம் வழி நடைச் சிந்து, கப்பல் கும்மி, ஒப்பாரி போன்றவை விவசாய வளம் பொருந்திய ஒரு சமூகத்தவரின் வாழ்க்கையோடொட்டி அமைந்தனவாகும். கவிஞர் அப்துல் காதர் லெவ்வை அவர்களின் பின்வரும் கூற்று, கிழக்கு மாகாண இலக்கிய மரபினுக்குச் சிறந்ததொரு விளக்கமாகவுள்ளது "மட்டக்களப்புக் கவிகளை நாம் ஆராயும் பொழுது அவை முழுக்க முழுக்க மருத நிலத்துப் பண்பாட்டை அண்டியதாகவே காணப்படுகின்றன. மிருகங்கள், பறவைகள், வயல் குளம், தாவரங்கள் முதலிய யாவும் அக்கவிகளில் மருத நிலத்துக்குரியனவேயாகும். அக்கவிகளில் வரும் ஏராளமான சொற்கள், சம்பிரதாயங்கள், அகத்திணை புறத்திணை பற்றிய கூட்டுறவுச் சிக்கல்கள் யாவும் மருத நிலத்திற்குரியனவே."

கிழக்கு முஸ்லிம் புலவர்கள்

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த பெரும்பாலான முஸ்லிம் புலவர்களுள், வரகவி ஷெய்கு மதார்ப் புலவர் முஹம்மது ருவிப் புலவர் அப்துர் ரஹ்மான் லெப்பை ஆலிம், சின்ன ஆலிம் அப்பா, முஹம்மது ஹாஷிம் புலவர் உமறு லெப்பைப் புலவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஷெய்கு மதார்ப் புலவரின் பாடல்களுள் ஹக்கு பேரில் முனாஜாத்து, நபிகள் நாயகம் (ஸல்) பேரில் முனாஜாத்து, ஒருபா ஒருபஃது செய்யித் செய்னுல் ஆபிதீன் (வலி) பேரில் காவியம் புயற்காவியம் என்பன சிலவாம். ஷெய்கு மதார்ப்புலவர் இந்தியா சென்று அங்கும் தமது ஆற்றலை நிலை நாட்டியுள்ளார். அவருடைய ஒருபா ஒரு பஃது நாகூர் ஆண்டவர் பேரில் இயற்றப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் இளம் வயதில் மௌத்தான முஹம்மது ரூவிப் புலவர் சரம கவிபாடுவதில் புகழ் பெற்றிருந்தார். இவர் வரகவிஷெய்கு மதார்ப்புலவரின் புதல்வராவர். மணமங்கல மாலை, மிஸ்பாஹுல் இஸ்லாம் என்பனவும், பல தனிப் பாடல்களும் படைத்தவர் அப்துர் ரஹ்மான் லெப்பை ஆலிம் புலவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சின்ன ஆலிம் அப்பா என்ற இ. மீருலெப்பை ஆலிம் அவர்கள் "ஞானரைவென்றான்" எனும் நூலாசிரியராவர். இந்தியா சென்று மார்க்கக்கல்வி பயின்ற இவர் அறபு மொழியிலும், தமிழ் மொழியிலும் நல்ல தேர்ச்சியுடையவ ராயிருந்தார்.

மற்றும் திருக்கோணமலையைச் சேர்ந்த ஷெய்கு மதார்ப் புலவர், சீனி முஹம்மதுப்புலவர், மூதூரைச் சேர்ந்த முஹி தீன் பிச்சைப்புலவர், உமறு நெயினார் புலவர் முதலியோ ரும் கிழக்குப் பிரதேச இஸ்லாமிய இலக்கியத்தை வளம்படுத் தியவர்களாவர். இப்பிரதேச இலக்கிய வளத்தினை விரிவாக ஆய்வதற்கான வாய்ப்புக்கள் போதிய அளவு எனக்கமை யாமையால், இதனை இப்போதும் தொடர்ந்து வருகின் றேன். அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள ஆசிரியப் பயிற்சி கல்லூரியினருக்கு இத்துறை பயன்மிக்க தோர் அறிவுக் களஞ் சியமாகும். அதேபோன்று எமது பல்கலைக்கழக மாணவர் கவனத்திற்கும் உரியதாகும்.

மன்னார்க் குடாக் கடலின் வளமான முத்துப்பண்ணை கள் இம்மாவட்டத்திற்கும் தமிழகத்திற்கும் தொன்று தொட்டு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன. தமிழ் இலக்கியத் துறையிலும் இத்தொடர்பு பயனுள்ள தாய் இருந்து வந்துள்ளது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் கௌரவிக்கப்பட்ட எருக்கலம்பிட்டி பக்கீர் புலவர், விதானைப் புலவர், முஹதீன் கற்புடையார், மீரான் மொஹிதீன் ஆலிம் புலவர், முஹம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது ஷரீபுப் புலவர் முதலியோர் இப்பிரதேசத்தில் பிரசித்த மானவர்களாவர். மன்னார்ப் பிரதேசத்தில் முஸ்லிம்களி டையே பல நாடக நூல்கள் தோன்றியுள்ளதாக அறியக் கிடக்கிறது. பக்கீர்ப் புலவரின் ''சாந்த ரூபி நாடகம்'' ''சப்த கன்னியர்'' நாடகம், விதானைப் புலவரின் ''கபுகாபு நாடகம்'' போன்றவை இங்கு முஸ்லிம்களிடையே வழங்கி வந்துள்ளன. இவ்வாறு இங்கு முஸ்லிம்களிடையே பரவலாக நாடக நூல்கள் தோன்றுவதற்குக் காரணம், இப்பிரதேசத்தில் வாழும் கிறிஸ்தவ மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த நாடக இலக்கியத்தின் தாக்கமாக இருத்தல் கூடும்.

புராண விரிவுரைகள்

எருக்கலம்பிட்டி, தாராபுரமெனும் தாராக்குண்டு போன்ற கிராமங்களில் சீறாப்புராண, முஹிதீன் புராண விரி வுரைகள் நெடுங்காலமாக நிகழ்ந்து வருகின்றன. தாரா புரத்திலுள்ள ''புலவர் அகம்'' இம்மரபினுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மற்றும் ஒரு சில நாட்டுப் பாடல்களும், களி கம்புப் பாட்டு, அம்பாப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, கப்பற் பாட்டு, பைத்துக்கள் போன்றவை இப்பிரதேச மரபுகளா யிருந்து வந்துள்ளன. இப்பிரதேசம் தமிழகத்துக்கு மிகவும் அண்மியதாக இருப்பதால் தமிழகக் கலாசாரத் தாக்கம் இங்கு இலங்கையின் பிற பாகங்களைவிட கூடுதலாகவே ஏற்பட்டுள்ளது.

மன்னாரைப் போலவே புத்தளம், கற்பிட்டி, தேழி முத லிய மேற்குக்கரைப் பிரதேசங்களும் இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்கு ஏதுவாய் இருந்து வந்துள்ளன. காரைத்தீவைச் சேர்ந்த அந்தகக்கவி ஷெய்கு அலாவுத்தீன் புலவரும், தேழிக் கவிஞர் அப்துல் மஜீதுப் புலவரும் இப்பிரதேசத்துக் கவி ஞருள் முக்கியமானவர்களாவர். அப்துல் மஜீதுப் புலவர், கிழக்கரையில் பிறந்தவராயினும், ஈழத்தையே தமது வசிப் பிடமாகக் கொண்டவர். இவரது ஆசாரக்கோவைக் கவிதை கள் இந்நாட்டு மக்களால் பரவலாக மனனம் செய்யப்பட்டு வழங்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தலைநகராகிய கொழும்பிற்கு இந்நாட்டு இஸ்லாமிய இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் உண்டு. அறிவார்ந்த பல புலவோரும் ஆத்ம ஞானிகளும் பத்திராதிபர்களும் சமயப் பிரசாரகர்களும், இங்கிருந்து இலக்கியப் பணி புரிந்து வந்துள்ளார்கள். முஸ்லிம் பத்திரிகைத் துறையிலும் நூல் வெளியீட்டுத் துறையிலும் விற்பனைத் துறையிலும் கொழும்பு பிரதான இடம் வகித்து வந்துள்ளது. கொழும்பில் முஸ்லிம்களால் நடத்தப்பட்ட சில அச்சகங்கள் இஸ்லாமிய நூல்களினதும், பத்திரிகைகளினதும் வெளியீட்டிற்கு உதவி வந்துள்ளன. நாம் ஏற்கனவே குறிப்பிட்ட புதினாலங்காரி அச்சகமே நானறிந்த மிகவும் பழமையான அச்சகமாகும். மற்றும் முஸ்லிம் நேசன் அச்சகம், இஸ்லாம் மித்திரன் பிரஸ், ஸ்டார் பிரஸ் முதலியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

முஸ்லிம் பத்திரிகைகள்

தலைநகரிலிருந்து வெளியான முஸ்லிம் பத்திரிகைகளும் இஸ்லாமிய இலக்கியத்தைப் பல பொதுத் திசைகளில் செலுத்த உதவியுள்ளன. சித்தி லெவ்வையின் முஸ்லிம் நேசன் *(1883)* ஞான தீபம் *(1892)* எல். எம். உதுமானின் இஸ்லாம் மித்திரன் *(1893)* ஐ. எல். எம். அப்துல் அஸீஸின் முஸ்லிம் பாதுகாவலன் *(1901)* முதலியன முஸ்லிம் பத்திரிகைகளின் முன்னோடிகளாகும். முஸ்லிம் நேசனுக்கும் முன்னர், முஸ்லிம் புதினாலங்காரி என்றதொரு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதெனினும், அது நிலைக்கவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இஸ்லாமிய இலக்கிய வெளியீட்டில், கொழும்பில் இருந்த சில நூல் விற்பனையாளர்களும் ஊக்கங்காட்டி வந்துள்ளார்கள். கா. உதுமான் கனி ராவுத்தர், நெ. வா. காதர் நெய்னா லெப்பை, எம். எஸ். முஹுதீன் சேரு முதலியார் போன்றவர்கள் வெறும் நூல் விற்பனையாளர்களாக மாத்திரமின்றி நூல் வெளியீட்டுப் பணியையும் புரிந்து இஸ்லாமிய இலக்கிய நூற் பெருக்கத்துக்கு உதவியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பனித் தெருப் பாராயணம்

கொழும்பில் இஸ்லாமிய இலக்கிய நூல்களை ஆண்டு தோறும் பாராயணம் செய்து வரும் பல மஜ்லிஸ்களும் தொடர்ந்து இயங்கி வந்துள்ளன. கொழும்பு நகரில் தமிழகத்து முஸ்லிம்களின் குடியேற்ற அமைப்பின் அடியாகவே இந்த மஜ்லிஸ்கள் உருவாகியிருப்பதாகத் தெரிகின்றது. உதாரணமாக, திருவிதாங் கோட்டுப் பிரதேசத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் திருவிதாங்கோட்டில் அடங்கியுள்ள ஷெய்கு நூருத்தீன் (வலி) அவர்களைப் புகழ்ந்தேத்தும் நாஸூத்து மாலையை ஆண்டு தோறும் கும்பனித்தெருவில் பாராயணம் செய்து வருகிறார்கள். இந்த மஜ்லிஸ் சுமார் நூறு ஆண்டுகட்கு மேலாக நடந்து வருகின்றது. மற்றும் தற்கலைப் பிரதேசத்திலிருந்து வந்த ஒரு குழுவினர், தற்கலைப் பீர்முஹம்மது அப்பா அவர்களுடைய ஞானப் புகழ்ச்சியை ஆண்டு தோறும் இசைத்து வருகிறார்கள். வேறு குழுவினர்கள், ஞானியார் சாஹிபு அவர்கள் பாடல்களையும் சீறாப் புராணத்தையும் பாராயணம் செய்து வருகின்றார்கள். தற்காலத்தில் இவை போன்ற மஜ்லிஸ்கள் அருகி வருகின்றன

ஆத்மஞான வழியே ஈடுபட்ட சிலர், ஞானத்துறையிலான இலக்கியத்தை இந்நாட்டில் பரப்புவதற்கு உதவியுள்ளார்கள். இவ்வகையில் கொழும்பில் சில காலம் தங்கியிருந்து ஆத்மிக வழிகாட்டிச் சென்ற தென் காசியைச் சேர்ந்த பரிமளம் முஹம்மது காஸிம் ஸாஹிபு அவர்களின் ஞானமிர்த போதினியும், அவர்களது துணைவியாராகிய இரசூல் பீவி அம்மாளின் ஞானமிர்த சாகரமும் இங்கு குறிப்பிடத்தக்கன. சுமார் அறுபது ஆண்டுகட்கு முன்னர் ஒரு முஸ்லிம் பெண்மணி சிறப்பான பல ஞானப் பாடல்களை இயற்றியுள்ளமை ஓர் அரிய நிகழ்ச்சியேயாகும்.

நாகூர் தர்கா ஷரீப்

இலங்கை முஸ்லிம்களுக்கு நாகூர் ஷரீபுடனான தொடர்புகள் அவர்களது சமய, கலாசார இலக்கிய மரபு வளத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமொன்றாகும். இலங்கை முஸ்லிம் பிரதேசமெங்கும் சுற்றி பைத்துகள் ஓதிவரும் பக்கீர்கள் பெரும்பாலும் நாகூர் தர்கா ஷரீபுடன் தொடர்புடையவர்களாவர். இலங்கை முஸ்லிம்களின் வீடுகளில் சீறாப்புராணம், இராஜநாயகம், இராஜமணிமாலை, முஹியித்தீன் மாலை, கஸஸுல் அன்பியா, கன்சுல் கராமத், தலைபாத்திஹா, பெண் புத்தி மாலை போன்ற இஸ்லாமிய இலக்கிய நூல்கள் சேகரிக்கப்படுவதற்கு நாகூர் யாத்திரையே பெரும்பாலும் காரணமாயிருந்துள்ளது. பக்கீர்மார்களும், அக்காலத்திலே பிரபல்யமாயிருந்த பல இஸ்லாமிய, இலக்கியப் பாடல்களை இலங்கையின் முஸ்லிம் பிரதேசங்களெங்கும் பரவச் செய்து வந்துள்ளார்கள்.

கொழும்புக்குக் காலத்துக்குக் காலம் வந்து தங்கியிருந்து, இலங்கையின் ஏனைய பாகங்களுக்கு — சிறப்பாக தென் மேற்குப் பகுதிக்கு விஜயம் செய்து சமயப் பணியாற்றி வந்த காயல் பட்டினம் மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் எனும் ஆலிம் அரூஸ் ஸெய்யித் முஹம்மத் அவர்கள் அறபு, அறபுத்தமிழ் ஆகியவற்றில் சமய இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றியுள்ளார்கள். அவர்களுடைய இலக்கியப்படைப்புக்கள் சில இலங்கையிலுள்ள ஆத்மஞானிகளைப் பற்றியனவாகும். குருநாகல் கலேபண்டார ஒளலியா, அளுத்காமம் ஷெய்கு ஹஸன் (வலி) கந்தரை முஹம்மது ஹுஸைன் லெவ்வை ஆலிம் (வலி) ஆகியோர் பற்றிய ஆக்கங்களுட்பட சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட கஸீதாக்கள், பைத்துக்கள், மௌலூதுகள் முதலியவற்றை அவர்கள் படைத்துள்ளார்கள். மேலும் மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் அவர்கள், இலங்கையில் சுமார் 300க்கும் மேற்பட்ட பள்ளிவாயில்கள், தக்கியாக்கள் மத்ரஸாக்களின் தோற்றத்திற்குக் காரணமாயிருந்தார்கள் என்று கூறப்படுகிறது. இலங்கையில் இஸ்லாமிய சமய, கலாசார புத்துணர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் மாண்புமிக்க மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் அவர்கள் சிறப்பிடம் வகிக்கிறார்களென்பது மிகைக் கூற்றாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் சூழ்ந்த காலம்

''தென்னிந்திய முஸ்லிம்களினதும் ஈழம் வாழ் முஸ்லிம்களினதும் வரலாற்றில் மிக இருள் சூழ்ந்த காலக் கட்டத்தில் அல்லாமா மாப்பிள்ளை ஆலிம் அவர்களின் பணி நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்புதல்வியார் பேரிலுள்ள தலைப்பாத்திஹா, ஈழத்தில் இசை பெறும் காலம் வரை, ஈழத்துப் பள்ளிகளில் ''ஜலாலியா ராதிபின்'' ஓங்கார ஓசை ஒலிக்கும் வரை, அஷ்ஷெய்குல் காமில் இமாமுல் அரூஸ் ஹஜ்ஜாஜுல் ஹரமைன் மலிகுஷ் ஷுஅரா மாப்பிள்ளை ஆலிம் நாயகம் அவர்களின் திருநாமம் எங்கள் நெஞ்சங்களில் நிலை பெற்றிருக்கும்.''

கொழும்பிலிருந்து தமிழகம் சென்று, இஸ்லாத்தின் பணியில் தம் வாழ் நாளில் பெரும் பகுதியைக் கழித்த கொழும்பு ஆலிம் எனும் ஸெய்யித் முஹம்மது ஹஸரத் அவர்கள் இந் நாட்டின் புகழைத் தமிழகத்தின் கிராமந் தோறும் பரப்பியவர்களாவர். ''சென்னை ராஜதானியில் உள்ள தமிழ் ஜில்லாக்களில் ஏறக்குறைய 240 மத்ரஸாக்கள்வரை ஸ்தாபித்து, அதற்காக அரபுத் தமிழில் அநேக கிதாபுகள் அச்சிட்டு இலவசமாகக் கொடுத்து உதவி, தீன் பயிர் செழிக்கும் படி செய்து வந்த திவ்ய மகத்துவமுள்ள கொழும்பு ஆலிம் ஸாஹிபு'' தமிழக — ஈழத்து இஸ்லாமிய சமய கலாசார இலக்கிய உறவினுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாவர். இலங்கையில் அல்லாமத்து மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் அவர்களின் பணியும் தமிழகத்தில் கொழும்பு ஆலிம் ஸாஹிபு அவர்களின் பணியும் எம்மிரு நாடுகளுக்குமிடையிலான கலாசாரப் பிணைப்பின் சின்னமாகக் கொள்ளக் கூடியனவாகும்.

இலக்கியப் பெரியார்கள்

இறுதியாக, இலங்கையின் தென் மேற்குக் கரையோரப் பகுதிகளில் சிறப்பாக வேர்விலை, காலி, மாத்தறைப் பகுதிகளின் சமய இலக்கிய மரபு பற்றிக் கவனிப்போம். இப் பிரதேசம் பெரும்பாலும் சிங்களம் வழங்கும் பகுதி என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தமிழ் மொழி வளங்குன்றி அருகி வந்துள்ளதென்றும் ஒரு கருத்துப் பரவலாக நிலவி வருகின்றது. ஆனால். உண்மை நிலை இக் கருத்துக்கு ஆதரவு தருவதாக இல்லை. அன்றும், இன்றும் தமிழ் மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் இப் பிரதேசத்திலே வளமுற்று வருவது மறுக்க முடியாத உண்மையாகும். ஏனைய பிரதேசங்களிற்போலவே இங்கு கிராமியக் கவிதா மரபு வழங்கி வந்துள்ளது. கும்மி, லாவணி, சிந்து, கொடிப் பாடல் போன்ற கிராமியப் பாடல் மரபு இங்கும் காணப்படுகிறது.

மக்கூன் அப்துல் ஹமீதுப் புலவர், வேர்விலை அலியா மரிக்கார், ஷெய்கு முஸ்தபா (வலி), அளுத்காமம் ஆமிதுப் புலவர், காலி சேகுதம்பிப் புலவர், ஷம்சுத்தீன் புலவர், முதலான பல புலவர்கள் இப்பிரதேச இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள்.

வேர்விலையிலுள்ள கெச்சிமலை தர்கா ஷரீபும், புஹாரிப் பள்ளிவாயிலும் நபிகள் நாயக நன்மொழிகளான ஹதீதுக் கிரந்தங்களை ஆண்டுதோறும் ஓதிவரும் மரபினைப் பேணி வந்துள்ளன. இவ்விரு தலங்களின் பெரியார்களான ஷெய்கு அஷ்ரப் (வலி) அவர்களும், ஷெய்கு முஸ்தபா (வலி) அவர்களும் பல இலக்கிய ஆக்கங்களுக்குத் தலைவர்களாகத் திகழ்கிறார்கள். அதைப் போலவே அளுத்காமத்தில் அடங்கியுள்ள ஷெய்கு ஹஸன் (வலி) அவர்களும் பாடல்பெற்ற பெரியாராவர்.

இங்கு நாம் குறிப்பிட்ட இலக்கியப் பெரியார்களிடையே ஷெய்கு முஸ்தபா (வலி) அவர்களுடைய முன்னோடியான முயற்சிகளைச் சிறப்பித்துக் கூறவேண்டும். இலங்கையில் முதன் முதலாகத் திருக்குர்ஆன் தப்ஸீரை அறபுத்தமிழில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை இப் பெரியாரைச் சாரும்.

''பத்ஹுர் ரஹ்மான் பீ தப்ஸீரில் குர்ஆன்'' எனும் இத்தப்ஸீர் பம்பாயில் மத்பஉல் ஹஸனி அச்சுக்கூடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரா மரைக்காயர் குமஸ்தர் நெயினு மரைக்காயர் நொத் தாரிசு அவர்களின் முயற்சியால் ஹிஜ்ரி 1291ல் பதிப்பிக்கப் பட்டது. ஷெய்கு முஸ்தபா (வலி) அவர்களின் திருமறை விளக்க முயற்சி, தமிழகத்தில் ஆரம்ப கால முயற்சிகளான காயல் பட்டினம் ஹபீபு முஹம்மது ஆலிம் அவர்களின் 'புது ஹூர் ரஹ்மானியா பீ தப்ஸீரி கலாமிர்ரப்பானிய்யா'', காயல் பட்டினம் நூஹு லெவ்வை இப்னு அப்துல் காதிறு ஆலிம் அவர்களின் ''தப்ஸீர் பத்ஹுல் கரீம்'' ஆகியவற் றுக்கு முற்பட்டதாகும். பின்னைய தப்ஸீர்களிரண்டும். முறையே ஹிஜ்ரி 1296, 1299ம் ஆண்டுகளில் வெளியிடப் பட்டனவாகும். ஷெய்கு முஸ்தபா (வலி) அவர்களின் தப் ஸீரில் முதல் ஐந்து ஜூஸ்கள் மட்டுமே அச்சிடப்பட்டுள் ளன.

மாத்தறை காசிம் புலவரும் இங்கு சிறப்பித்துக் கூறத் தக்கவராவர். இவர் அறபு, தமிழ், சிங்களம் ஆகிய மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இமாம் பூஸிரி அவர்களின் புர்தா ஷரீபை இவர் கவிப்பரி வட்டம் என்னும் பெயரில் தமிழில் கவிதைகளாக்கியுள்ளார். சிங்கள மொழியில் றசூல் மாலை என்றதொரு மொழிபெயர்ப்பு நூலை யும் இவர் வெளியிட்டுள்ளார். இப் புலவர் நாடக நூலொன் றையும் எழுதியுள்ளதாக அறியக்கிடக்கிறது. ஷபர் பாதுஷா என்ற இந்நாடகத்தை இவரே தயாரித்து மேடையேற்றிய தாகக் கூறப்படுகிறது.

இறுதியாக, இலங்கை முஸ்லிம்களுள் ஒரு சிறு பகுதியின ரான மலாய் முஸ்லிம்களிடையே அரும்பிய சில இலக்கிய முயற்சிகளையும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். ருகலை யைச் சேர்ந்த துவான் கிச்சில் ஜப்பார் குறிப்பிடத்தக்கவரா வர். இமாம் ஷிஹாபுத்தீன் என்பார் எழுதிய ''பாயிதாக் குர்ஆனை'' ஷேக் உதுமான் அவர்களைக் கொண்டு அறபுத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு அப்துல் கரீம் துவான், ஆரிபீன் துவான் ஆகிய இரு சகோதரர்கள் முயற்சி எடுத்துள்ளார்கள். பத்திரிகைத் துறையிலும் மலாய் முஸ்லிம் கள் முன்னோடிகளாய்த் திகழ்கிறார்கள். மலாய் மொழியில் அலமாத் லங்காபுரி'' என்ற பத்திரிகையைத் துவான் பாபா யூனூஸ் அவர்கள் 1859ம் ஆண்டில் வெளியிடத் துவங்கினார் கள். இப் பத்திரிகை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடை பெற்று வந்தது. பின்னர். 'வாஜா—ஸைலான்' என்ற பத்திரி கையையும் பாபா யூனூஸ் அவர்களே நடத்தினார்கள். இலங்கை முஸ்லிம்களிடையே தமிழில் தோற்றிய பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மலாய்ப் பத்திரிகை மரபும் உதவியிருக்குமென்று நாம் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. மலாய் முஸ்லிம்களின் இலக்கிய மரபு விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்றாகு மெனினும், இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் அவர்கள் ஏனைய முஸ்லிம்களுடன் ஒருமைப் பாட்டுடனேயே இயங்கி வந்துள்ளார்கள்.

வரலாற்றாசிரியர் கடன்

இதுவரை நாம் கூறியவற்றிலிருந்து ஓரளவு இலங்கை முஸ்லிம்களின் இலக்கிய மரபினைத் தெளியக் கூடுமாயிருக் கும். போதிய ஆய்வுக்குட்படாததொரு துறையாதலின் இக்கட்டுரையில் நாம் சிற்சில விவரங்களை மட்டுமே வழங்க முடிந்தது. போதிய ஆதாரமும், தெளிவுமில்லாத காரணத் தால் எமக்கெட்டிய பல விடயங்களைத் தவிர்க்கவும் நேர்ந் துள்ளது. எனினும் இங்கெடுத்துக் கூறப்பட்ட விவரங்களி லிருந்து இலங்கை முஸ்லிம்களுக்குப் பெருமைகொள்ளத் தக்கதோர் இலக்கியப் பாரம்பரியம் உண்டென்பது மட்டும் எவ்வித சந்தேகத்திற்குமிடமின்றி உறுதியாகின்றது. இந்த மரபினை முழுமையாகவும், விரிவாகவும் நாம் காணுமாறு செய்யவேண்டியது எமது இலக்கிய வரலாற்றாசிரியர்களின் தலையாய கடனாகும். இத்துறையில் என்னாலியன்ற தகவல் களைத் தேடி இவ்வறிமுகக் கட்டுரையை விரிவாக்கி வருகின் றேன். இவ்வகையில் எமக்குதவக்கூடியவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கி றேன்.

இக் கட்டுரையின் ஆக்கத்திற்கு உதவிய பல நூல்களுக் குப் புறம்பாகப் பல அரிய தகவல்களை எனக்களித்து உதவிய கொழும்பைச் சேர்ந்த ஜனாப்கள் நா. அல்லாபிச்சை, எப். எம். இபுராஹிம் ஆகியோருக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

(உதவி : தினகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAITH – UNITY – DISCIPLINE

Published by
Bureau of Publications
All-Ceylon Y.M.M.A. Conference
63, Sri Vajiragnana Mawatha,
Colombo-9, Sri Lanka.
Phone : 94075

Cable : "Islamyouth"

Printed at I. P. C. Printing Press, Colombo-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org